கோகுலம்

GOKULAM ஜூன் 2000 ரூ. 6/-



கிளிக்குப் பழம் தர வழி சொல்லுங்கள்!



விடை: 3






ஏழு
வித்தியாசங்களைக்
கண்டுபிடியுங்கள்!

விடை: 1. பையின் கைப்பிடி 2. மேகம் 3. நீர்த்துளி 4. சிறுமியின் வளையல் 5. சிறுவனின் சட்டை 6. குடைக்கம்பி 7. நாயின் கழுத்துப் பட்டை.

பிருந்தாவனம்

வரைந்து பழகுங்கள்!







கோகுலம்

2000

ஜூன்

மலர் : 18

இதழ் : 5

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

விடுமுறை முடிந்து பள்ளிக் கூடங்கள் திறக்கிற மாதம் ஜூன். மேல் வகுப்பில் போய் உட்காரும்போது ஒரு 'த்ரில்' உண்டாகத்தான் செய்யும்! புதிய வகுப்பு, புதிய புத்தகங்கள், புதிய ஆசிரியர்கள், புதிய பாடங்கள், அவற்றால் எழும் புதிய கஷ்டங்கள், புதிய சந்தேகங்கள்! நல்லவேளை, நமக்குப் பக்கபலமாக இருக்கும் பழைய நண்பர்கள்!

உங்கள் புதிய புத்தகங்களுக்காக சென்ற இதழ் போலவே இந்த இதழிலும் வண்ண லேபில்கள் இணைத்துள்ளோம். பயன்படுத்திக் கொள்ளுங்கள். புதிய பாடப் புத்தகங்களை முகர்ந்து பார்ப்பதுடன் நின்று விடாமல் படிக்கவும் ஆரம்பியுங்கள்! அவ்வப்போது வகுப்பில் நடக்கும் பாடங்களை உடனுக்குடன் மறுமுறை படித்து மனத்தில் வாங்கிக் கொண்டால் பரீட்சைகளை எதிர்கொள்வது சுலபம்.

இந்த விடுமுறையில் நிறைய கதைப் புத்தகங்கள் படித்திருப்பீர்களே? இனிமேலும் பாடங்களைப் படிப்பதற்கு இடையில் ஒரு மாறுதலுக்காக கதைப் புத்தகங்கள், வாழ்க்கை வரலாறுகள், பல விதமான அறிவியல் நூல்கள் போன்றவற்றைப் படிக்கலாம். பள்ளிக்கூட நூலகத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். அதில் இல்லாத, ஆனால் உங்களுக்குப் பிடித்த புதிய புத்தகங்களை வாங்கப் பணம் இல்லையென்றால் ஐந்தாறு நண்பர்கள் சேர்ந்து 'கோகுலம் சிறுவர் சங்கம்' அமைக்கலாம். ஆளுக்குக் கொஞ்சமாகப் பணம்போட்டு ஒரு புத்தகத்தை வாங்கி மாறி மாறிப் படித்துப் பயன் அடையலாம். நாளாவட்டத்தில் உங்கள் சங்கத்தில் ஒரு சின்ன நூலகமே உருவாகிவிடும்! 'லெண்டிங் லைப்ரரி' கூட நடத்தி வருவாயை மேலும் சில நூல்கள் வாங்கப் பயன்படுத்தலாம். கோகுலம் சிறுவர் சங்கம் அமைத்தால் அது பற்றி எங்களுக்கு எழுதுங்களேன்!



'ஹோம் ஒர்க்கை முடித்து, சற்று நேரம் விளையாடினால் டீ.வி.பார்க்கக் கூட நேரம் இருப்பதில்லை; எப்படி கதைப் புத்தகம் படிப்பது?' என்று மட்டும் கேட்டு விடாதீர்கள்! ஒரு நாளைக்கு பத்துப் பக்கம் படித்தால் கூட ஒரு மாதத்தில் 300 பக்கம் படிக்கலாம். வருஷத்தில் 3600 பக்கம்! பொது அறிவு விருத்தியாகும்.

இன்னொரு விஷயம்: படிப்பது கண்களுக்கு ஆரோக்கியமான நல்ல பயிற்சி; டீ.வி. அதிகம் பார்ப்பதோ கண்களுக்குக் கெடுதல். சந்தேகமிருந்தால் உங்கள் குடும்ப டாக்டரைக் கேட்டுப் பாருங்கள்! நான் டீ.வியின் விரோதி அல்ல; அதன் ஆளுமைக்குத்தான் விரோதி!

அன்புடன்,



கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.


கோகுலம் நியூஸ்!

வடதுருவத்தில் பறந்து சாதனை!

வடதுருவத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். அங்கு உறையவைக்கும் கடுங்குளிர் நிலவும். எங்கும் பனி படர்ந்து காணப்படும். இத்தகைய வடதுருவத்தில் கூரையில்லாத விமானத்தில் பயணம் செய்து ஒருவர் சாதனை படைத்திருக் கிறார் என்றால் பெரிய விஷயம்தான்! மேரி லேண்டைச் சேர்ந்த மெக்லீயோட் என்ற நாற்பத்தி ஐந்து வயது பைலட்தான் இச் சாதனை யின் சொந்தக்காரர். மேற் கூரை இல்லாத விமானத்தில் 5 ஆயிரத்து 632 கிலோ மீட்டர் தூரம் குளிரில் நடுங்கியபடி பயணித்திருக் கிறார்.


பழமையான புத்தகக்கடை

மிகப் பழமையான புத்தகக் கடையான ஜான் ஸ்மித் லண் டனில் 1751ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தது. இருநூற்றி ஐம்பது வருடங் களாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல தலைமுறைகள் இக்கடையை நிர்வகித்து வந்தார்கள். இப்போதுள்ள பரபரப்பான வர்த்தக சூழ்நிலையையும் இண்டர்நெட் வர்த்தகத்தையும் சமாளிக்க இயலாமல் இந்தப் புத்தகக் கடையை மூடிவிட முடிவு செய்துள்ளனர் அக்கடை யின் உரிமையாளர்கள்.



2000 இந்த இதழில்







இதனால் ஐம்பதாயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

மலைப்பாம்பு வியாபாரம்

மேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவில் மலைப் பாம்புகள் அதிகம். கடந்த ஆண்டு மட்டும் மலைப் பாம்பு ஏற்றுமதி மூலம் 60 ஆயிரம் கோடி வருமானம் ஈட்டியுள்ளது கானா. பாம்புகளைப் பராமரிக்கவும் ஏற்றுமதி செய்யவும் அந்நாட்டு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. காடுகளில் உள்ள சினைப் பாம்புகளைப் பிடித்து வந்து அவை முட்டையிட்ட பின் மீண்டும் அந்தப் பெண் பாம்பை காட்டில் கொண்டு விடுவார்கள். முட்டையிலிருந்து வெளிவந்த பாம்புகளில் 10 சதவீதத்தை மீண்டும் காட்டில் விட்டு விட வேண்டும் என்ற நிபந்தனையுடன் பாம்பு ஏற்றுமதி நடைபெற்று வருகிறது.

கடந்த ஆண்டு 6 ஆயிரம் பெரிய மலைப் பாம்புகளும், 28 ஆயிரம் குட்டிப் பாம்புகளும் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன.

வறட்சி

இந்த ஆண்டு கோடை வறட்சி நம் நாட்டை மிகவும் பாதித்துள்ளது. குஜராத், ராஜஸ்தான், ஒரிசா மாநிலங்களில் கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. கிராமங்களில் தண்ணீர் இன்றி ஆடு,மாடு போன்ற கால் நடைகள் செத்து மடிகின்றன. ராஜஸ்தானில் ஒட்டகத்தின் உதவியால் தினமும் 20 கி.மீ. தூரம் பயணம் செய்து தண்ணீரைக் கொண்டு வருகிறார்கள் மக்கள்.

நான் மிகவும் பயந்த சுபாவம் கொண்டவள். யார் எதைச் சொன்னாலும் நம்பி விடுவேன். அதுவும் சிறு வயதில் என் ஃப்ரெண்ட்ஸ் என்னை ரொம்பவே ஏமாற்றுவார்கள். நல்ல புது பென்சில் எடுத்துக்கொண்டு போனால் அதைச் சீவி, சீவி, சிறியதாக ஆக்கிக் கொடுத்து விடுவார்கள். வீட்டிற்கு வந்தால் டோஸ் கிடைக்கும். என்னையும் என் அக்கா காயத்ரியையும் தினசரி காரில் கொண்டு போய் விட்டு, பள்ளி விட்டதும் காரிலேயே கூட்டிக் கொண்டு வருவார் அப்பா. சித்ரா என்று எனக்கொரு பள்ளித்தோழி. தினசரி நான் காரில் வருவதைப் பார்த்துக் கொண் டிருப்பாள். ஒருநாள் என்னிடம் "நீ காரில் தானே பள்ளிக்கு வருகிறாய்; நான் வரும் வாகனத்தில் உன்னால் வர முடியாது" என்றாள். "நீ எதுல வர்ற?" என்றேன் ஆவலுடன். ''நான் தினசரி மயிலில் வருகிறேன்'' என்றாள் சித்ரா. எனக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. ''என் னது முருகன்தான் மயிலில் பயணம் செய்வார் என்று அம்மா சொல்லியிருக் கிறார். மயில் உன்னை எப்படி ஏற்றிக் கொண்டு வரும்? நான் ஒருநாள் கூட பார்த்ததில்லையே!'' என்றேன். ''வாசல் கேட் அருகிலேயே இறக்கி விட்டுப் போய் விடும் மயில்'' என்றாள் அவள். அப்புறம் சில நாள் சித்ரா எப்படி வருகிறாள் என்று பார்க்க பள்ளி வாசலி லேயே காத்திருந்ததை இப்போது நினைத்தாலும் சிரிப்புதான் வரும். எதற்குச் சொல்கிறேன் என்றால்; எதைச் சொன்னாலும் நம்பி விடுவேன் நான்.







எங்கள் குடும்பம் நல்ல இசைப் பாரம்பரியத்துக்குச் சொந்தமான குடும்பம். அப்பாவுடைய அம்மா பிரபல கர்நாடக இசைப் பாடகரான டி.கே. பட்டம் மாள். அப்பா சிவகுமார் மிருதங்க வித்வான். அதேபோல் அம்மாவின் அப்பா மிருதங்க வித் வான் பாலக்காடு மணி அய்யர். அம்மா லலிதா சிறந்த பாடகர். எனவே நல்ல இசைச் சூழலில் வளர்ந்தேன். பாட்டி பட்டம்மாவுக்கு என் மேல் கொள்ளை பிரியம். என் குழந்தைத் தனமான

!




மயில்மேல் வந்த தோழி!

குறும்புகளைப் பாட்டியிடம் காட்டுவேன். பாட்டி எப்போதும் கொண்டை போட்டுக்கொண்டு அழகாக இருப்பார். ஒருநாள் இது old fashion என்று பாட்டியின் கொண்டையைப் பிரித்து விட்டு, சீப்பை எடுத்து அழகாக வாரி, இரட்டைப் பின்னல் போட்டு விட்டேன் பாட்டிக்கு. ''ஏய்... என்னடி பண்ணறே...'' என்று பாட்டி, கண்ணாடியைப் பார்க்க அவருக்கு லேசான ஷாக்... ''உன்னை உதைக்கறேன் பாரு'' என்று செல்லமாக கோபிக்க அந்த சமயம் பார்த்துத்தானா பாட்டியைப் பார்க்க யாரோ வர வேண்டும்! பாட்டி அவசர, அவசரமாக உள் அறைக்குப் போய் கொண்டைக்கு மாறி வர... ஒரே தமாஷ்தான்!

நந்தனத்தில் உள்ள ஆல்பா பள்ளியில்தான் படித்தேன். எனக்கு எல்.கே.ஜி.யில் ஆசிரியையாக இருந்த திருமதி டி. குருஸ், அழகாக டிரஸ் செய்து கொண்டு வரும் உமா மிஸ், ஐந்தாம் வகுப்பில் ஆசிரியையாக இருந்த அன்னா ஜான் ஆகியோரை மறக்க முடியாது. குறிப்பாக அன்னா ஜான் அவர்கள் சொந்த வேலை காரணமாக பள்ளியிலிருந்து ராஜினாமா செய்யப் போவதாகக் கேள்விப்பட்டபோது எனக்கு அழுகையே வந்துவிட்டது. அவருக்கு நல்ல பரிசு கொடுக்க வேண்டும் என்று அப்பாவுடன் அலைந்து திரிந்து ஷோகேஸில் வைக்கக் கூடிய ஒரு பரிசை வாங்கினேன். அதை நன்றாக பாக் செய்துகொண்டு அன்னா ஜானிடம் கொடுக்கச் சென்றேன். ஆனால் அவர் ''ஸ்டூடண்ட்ஸிடமிருந்து டீச்சர் பரிசுப் பொருள் வாங்கக்கூடாது'' என்று மறுத்து விட்டார்.

மூன்றாவது நான்காவது படிக்கும் போது இந்து என்றொரு தோழி இருந்தாள். எப்போதும் முதல் ராங்க் தான். 'இந்துவைப் போல படிக்கணும்; அவ கூட எப்போதும் நட்பா இருக்கணும்' என்று எனக்கு ரொம்ப ஆசை. ஆனால் நான்காம் வகுப்பு முடியும் தருவாயில் அவர்கள் வேறு வீட்டுக்குப் போய் விட்டார்கள். இந்துவின் சொந்தக்காரர்கள் என் வீட்டருகில் இருந்ததால், நான் அவளைப் பற்றி அவர்களிடம் விசாரித்துக் கொண்

நித்யஸ்ரீ மகாதேவன்




டிருப்பேன். கடைசியாக பிலானியில் படித்துக் கொண்டிருந்ததாகக் கேள்விப் பட்டேன். ஆனால் 'டச்' இல்லை. இந்த நிலையில் கடந்த வருடம் ஸ்டேட் ஸுக்குப் போயிருந்தேன். ஒருநாள் என் இ.மெயிலில் 'ஆல்பா பள்ளி இந்துவை ஞாபகம் இருக்கிறதா?' – என்று வந்தது. எனக்கு ஒரே சந்தோஷம். 'நல்லா ஞாபகம் இருக்கு இந்து' என்று பதிலனுப்பினேன். இந்து இப்போது கம்ப்யூட்டர் இன்ஜினியர். அப்புறம் சந்தித்துப் பேசினோம். மலரும் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டோம்.

சிறுவயதிலிருந்தே எனக்கு இசைப் பயிற்சியை கொடுக்கத் துவங்கி விட் டார் அம்மா. காலையில் நாலரை மணிக்கே எழுப்பி விடுவார். என்னுடன் உட்கார்ந்து விடுவார். இரண்டு மணி நேரம் சாதகம் செய்துவிட்டு, அதன் பின் ஹோம் ஒர்க் செய்துவிட்டு, பள்ளிக்குச் செல்ல சரியாக இருக்கும். இளம் வயதில் தினசரி காலை நாலரை மணிக்கு எழுந்து கொள்வது என்றால் எவ்வளவு சலிப்பாக இருக்கும் என்று அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். இருந்தாலும் என் அம்மா மகா பொறுமைசாலி. தூக்கத்தைத் தியாகம் செய்யத் தயங்கும் என்னை தட்டிக் கொடுத்து, தாஜா செய்து எழுப்பி விடு வார். அவர் எனக்காக சிரமப்பட்டதன் பலன் இப்போதுதான் தெரி கிறது.

என் முதல் கச்சேரி நான் ஒன்பதாவது படிக் கும்போது 'இளம் இசைக் கலைஞர்கள் சங்கம்' சார்பில் மியூ ஸிக் அகாதமி அரங்கில் நடந்தது. அப்பாவை நமஸ்காரம் செய்து முடித்தபின் அவர் "நீ ஒரு நல்ல இசைப் பாரம் பரியத்தின் பிரதிநிதி யாக பாடப் போகிறாய். அதனால் மக்கள் உன்னை உடனே ஏற்றுக் கொண்டு விடுவார்கள். ஆனால், உன் வித்வத்தை வைத்துத்தான் நீ நிலைத்து நிற்பது பற்றி தெரிய வரும். பெரியவர் கள் பெயரைக் காப்பாற்ற வேண்டிய பெரிய பொறுப்பு உனக்கு இருக்கிறது" என்றார். ஏற்கனவே நடுக்கத்தில் இருந்த நான் இன்னமும் கொஞ்சம் டென் ஷனாகி விட்டேன். இருந்தாலும், தைரி யத்தை வரவழைத்துக் கொண்டு மேடைக்குச் சென்று அமர்ந்தேன். அப்புறம் என்னைச் சுற்றியுள்ள சூழலை மறந்தேன். அதுவரை கற்றறிந்ததை என் முழு திறமையைப் பயன்படுத்தி வெளிப் படுத்தினேன். பரிசு கிடைத்தது. நூற்றுக் கணக்கான கச்சேரிகள் செய்து முடித்து விட்ட இன்றைய நிலையில்கூட, மேடைக்குப் போகும்வரை ஒரு பட படப்போடு இருப்பேன். அப்புறம் பாடத் துவங்கினால் படபடப்பு பறந் தோடி விடும்.

ஆறாம் வகுப்பிலிருந்து தி.நகர் சாரதா வித்யாலயா பள்ளியில்தான் படித்தேன். என் இசை ஆர்வத்துக்கு ஊக்கம் கொடுத்த பள்ளி இது. இசை



போட்டிகளுக்கு அனுப்புவார்கள். பக்தி, ஒழுக்கம் என்று மாணவிகளை நன்றாகவே தயார் செய்வார்கள். பள்ளி ஆண்டு விழாவில் ஷேக்ஸ்பியரின் 'கிங் லியர்' நாடகத்தில் ராஜாவாக வேஷம் போட்டது மறக்க முடியாதது.

நான் எப்பவும் பாடங்களை அப்படியே மனப்பாடம் செய்ய மாட்டேன். புரிந்துகொண்டு சொந்தமாக எழுத முயற்சி செய்வேன். ஒரு சம்பவம் நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஆறாவதோ... ஏழாவதோ படித்துக் கொண்டிருந்தபோது நடந்தது. 'வெளிநாட்டுக்கு காந்தி செல்லும் முன்பாக அவர் அன்னைக்கு அவர் செய்து கொடுத்த சத்தியங்கள் என்ன?' என்பது கேள்வி. நான் கொச்சையாக 'சாராயம் சாப்பிட மாட்டேன்; சிக்கன் சாப்பிட மாட்டேன்' என்று சத்தியம் செய்து கொடுத்தார் என்று எழுதி விட்டேன். ஆசிரியை அதை வகுப்பில் படித்துக் காட்ட ஒரே சிரிப்பு. பத்தாவது பரீட்சையில் மாநிலத்திலேயே முதல் 25 பேரில் ஒருவராக பாஸ் செய்தேன். கல்லூரி படிப்பு வரை ஸ்காலர்ஷிப் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் அப்பா சர்டிபிகேட் மட்டும் பெற்றுக்கொண்டு விட்டு ஸ்காலர்ஷிப் வேண்டாமென்று சொல்லி விட்டார். 'நம்மைவிட வசதி குறைவான ஒரு மாணவிக்கு அது பயன் படட்டும்' என்று கூறி விட்டார்.



சிறு வயதிலிருந்தே இசையோடு ஒன்றிப் போய் விட்டாலும், ஒரு முழுநேர இசைக் கலைஞராக வருவேன் என்று எதிர்பார்க்கவில்லை. ப்ளஸ் ஒன் வகுப்பில் காமர்ஸ் பிரிவைத் தான் எடுத்தேன். சி.ஏ. ஆக வேண்டுமென்பது என் விருப்பமாக இருந்தது. அதே போல் பரத நாட்டிய உடை மேல் எனக்கொரு கிரேஸ். 'டான்ஸ் கற்றுக் கொண்டால் என்ன' என்று சிறிய ஆசை ஒன்று இருந்தது. என் ஆசைகள் இப்படி இருந்தாலும் நல்லதொரு இசை மரபை காப்பாற்ற வேண்டிய பெரிய பொறுப்பை இறைவன் எனக்களித்து இருக்கிறார்.

சந்திப்பு: **ப்ரியன்**

கோகுலம் க்விஸ் முடிவு

ஏப்ரல் மாதம் க்விஸ் போட்டியில் நிறைய பேர் கலந்து கொண்டாலும் பன்னிரண்டு பேரே சரியான விடைகளை அளித்திருக்கிறார்கள்.

ரூபாய் பதினாறு பரிசு பெறுவோர்:

1. சி. தீபக், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம்.
2. வை. அர்விந்த், நெய்வேலி,
3. அ. ஜெகதீஸ்வரி, திருச்சி.
4. மோனாலிசா எடின்பரோ, வடக்கன்குளம், நெல்லை மாவட்டம்.
5. எஸ். விசாலம், அயன்புரம், சென்னை.
6. வி. அஜய்ராஜா, இராமநாதபுரம்.
7. எஸ். கவிதா ஏழாம் வகுப்பு, திருநெல்வேலி.
8. எம். மேரி டால்பின், ஏழாம் வகுப்பு, புனித லாரன்ஸ் மேல்நிலைப்பள்ளி, மாடத்தட்டுவிளை, குமரி மாவட்டம்.
9. இரா. மாரியப்பன், தூத்துக்குடி.
10. எல். அஜிதா, சின்னத் திருப்பதி, சேலம்.
11. அ. சம்பத்குமார், கோவை.
12. கோ. சோபன்பாபு, மச்சுவாடி, புதுக்கோட்டை.

சரியான விடை

1. பர்மாவில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற பெண்மணி ஆங்சான் சூகி.
2. டென்னிஸ் உலகில் முன்னணியில் இருக்கும் அமெரிக்க சகோதரிகள் வீனஸ் வில்லியம்ஸ், செரினா வில்லியம்ஸ்
3. மலேரியா நோய் பெண் கொசுக்கள் மூலம் பரப்பப்படுகின்றது.
4. அச்சு எழுத்துகள் உருவாக்கும் முறையைக் கண்டறிந்தவர் ஜான்கூட்டன்பர்க்.
5. காளான்கள் ஸ்போர்கள் மூலம் இன விருத்தி செய்து கொள்கின்றன.
6. காகிதத்தைக் கண்டறிந்தவர்கள் சீனர்கள்.
7. பீஹாரின் தலைநகரம் பாட்னா.
8. மூங்கில் புல் இனத் தாவரம்.
9. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கோடை வாசஸ்தலம் கொடைக்கானல்.
10. இந்தியாவில் உள்ள பெரிய பாலைவனம் தார்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

சாதனைச் சிறுமி

சென்னையில் உள்ள சேத்துப்பட்டில் யூனியன் கிறிஸ்டியன் மெட்ரிகுலேஷன் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படிக்கிறாள் பி. சஞ்சனா. படிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் பிரஷ், பென்சில் சகிதமாகக் காட்சியளிப்பாள். ஏழு வயதிலேயே எக்ஸ்னோரா, லயன்ஸ் கிளப், ஒய்.எம்.சி.ஏ போன்ற பல நிறுவனங்கள் நடத்திய ஓவியப் போட்டியில் கலந்து பரிசுகளைக் குவித்திருக்கிறாள். இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போல் அமைந்தது என்சிஇஆர்டி மற்றும் யுனிசெஃப்பிரஇணைந்து நடத்திய அகில இந்திய போஸ்டர் போட்டிதான்! இப்போட்டியில் 6 முதல் 8 வயதிற்குட்பட்டோர் பிரிவில் மூன்றாவது இடத்தைப் பிடித்து பரிசை வென்றிருக்கிறாள் சஞ்சனா. ஓவியம் மட்டுமன்றி பரத நாட்டியத்திலும் இவளுக்கு ஆர்வம் அதிகம். முறையாகப் பயின்று வருகிறாள். படிப்பிலும் புலிதான். மிகச் சிறந்த ஓவியராக வர சஞ்சனாவை வாழ்த்துவோம்!




100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசாக வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்பவர்கள் விரைவில் அனுப்பி வைக்க வேண்டும்.

இந்த மாதப் போட்டி: கல்வி சம்பந்தப்பட்ட பொன்மொழிகள். தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள்.

இந்த மாதத்ததுடன் மேற்கண்ட மாவட்டங்களுக்கான போட்டி நிறைவடைகிறது. அடுத்த மாதப் போட்டி எந்தெந்த மாவட்டங்களுக்கு?

அடுத்த இதழ் வரை காத்திருங்கள்.



கொட்டிய தேள் எங்கே?

நேற்று இரவு தங்கப்பனின் தாயை பாம்பு கடித்து விட்டது. மயக்கம் அடைந்து அவர் படுத்து விட்டார். கடித்த இடத்துக்கு மேலாகக் கட்டுப் போட்டு, விஷம் ஏறாது இருப்பதற்காக ஏற்பாடு செய்தார்கள். மருத்துவருக்குச் சொல்லி அனுப்பினர்.

அடிபட்ட பாம்பு செத்து விட்டது. ஒரு மீட்டர் நீளமுள்ள பாம்பு.

மருத்துவர் வந்து பார்த்து, ஊசி போட்டார். நாடியைப் பிடித்துப் பார்த்த போது, வெறும் மயக்கம்தான், பயத்தால் ஏற்பட்ட மயக்கம் என்பது தெரிந்தது.

''கடித்தது விஷம் இல்லாத பாம்பாக இருக்கும்'' என்றார் மருத்துவர்.

விளக்கு வெளிச்சத்தில் செத்த பாம்பைப் புரட்டிப் போட்டுப் பார்த்தார்கள். தண்ணீர் பாம்பு என்று தீர்மானமாகத் தெரிந்தது. தண்ணீர் பாம்புக்கு விஷம் கிடையாது.

இப்படித்தான் ஒரு மாதத்துக்கு முன் தங்கப்பனை தேள் ஒன்று கொட்டி விட்டது. அவனுடைய வீட்டைச் சுற்றி தேள்களும் பாம்புகளும் இருப்பதற்குத் தங்கப்பன் காரணம் அல்ல. அவன் வசிக்கும் கிராமத்தில் உள்ள வீடுகள் அருகருகில் இல்லை. நிறையப் பேர் நகரங்களுக்கு வேலை கிடைத்து சென்று விட்டனர். ஆகவே கிராமத்திலிருந்த அந்தப் பழைய வீடுகள் கவனிப்பாரற்று, சிதிலமாகி, சுவர்கள் இடிந்து, ஓடுகள் சரிந்து, கேட்பாரற்றுக் கிடக்கின்றன. அந்த இடிந்த வீடுகளைச் சுற்றி கள்ளியும் கற்றாழையும் புதர்களுமாக மண்டிக் கிடக்கின்றன. ஆகவே, அந்த இடங்களை நாடி தேள்களும் பாம்புகளும் பூரானும் குடியிருக்க வந்தன.

சிறு வயதில் தங்கப்பன் மற்றவர்களைப் போல சரியாகப் பள்ளி சென்று படிக்கவில்லை. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து ஐந்தாவது வகுப்பில் கோட் அடித்து விட்டு, படிப்பை நிறுத்தி விட்டான். அந்தச் சின்ன வயதிலேயே பக்கத்து கிராமத்தில் பண்ணையாரின் தோட்டத்தில் வேலையில் சேர்ந்தான்.

இப்போது, படித்து தான் முன்னேறி இருக்கலாமே என்று தோன்றுகிறது. தோட்ட வேலையில் வெகுவாகத் தேர்ந்தவன் ஆகி விட்டான். சொன்னதைக் கேட்டு, ஒழுங்காக வேலை செய்பவன் என்பதாகப் பெயர் எடுத்தான் தங்கப்பன்.

தேள் கொட்டிய அன்று பண்ணையாரிடம் வந்து, "ஒருநாள் லீவு வேணும்" என்றான்.

"உண்மையாவே தேள் கொட்டி விட்

திருவாழத்தான்

டதா?" என்று பண்ணையார் சந்தேகத்துடன் கேட்டார்.

கைவிரலைக் காண்பித்தான். வலது கை நடு விரலின் நுனியில் லேசான கறுப்புத் தடம் ஒன்று தெரிந்தது. பண்ணையார் பார்த்தார். தெரியவில்லையோ அல்லது தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள அவருக்கு விருப்பம் இல்லையோ!

"பொய் சொல்கிறாய். போய் வேலையைப் பார்" என்றார்.

"எசமான், உண்மையிலேயே தேள்



"பாட்டி உன் பூர்விகம் புத்தூரா?"

"ஏண்டா?"

"நிறைய கட்டுக்கதை சொல்றியே!"

- தஞ்சை தாமு

கொட்டிடுச்சங்க. இன்னும் கடுக்குது."

"தேளை என்ன செய்தாய்?"

"அடிச்சிட்டேன்."

"அடிச்ச தேள் எங்கே?"

"அதைக் குப்பைமேட்டுல எறிஞ்சிட்டேங்க."

"நம்ப மாட்டேன். அடிச்சு, செத்த தேளை எடுத்துக் கொண்டு வந்து காண்பித்தால்தான் லீவு தருவேன்" என்று பண்ணையார் சொல்லி விட்டார்.

ஆகவே, விரலில் நமநம என்று வலி எடுக்க, தோட்ட வேலையைக் கவனிக்கச் சென்றான் தங்கப்பன்.

இப்போது அவனுடைய தாயை பாம்பு கடித்து விட்டது. மயக்கம் தெளிந்து இன்று அதிகாலையில் தாய் விழித்துக் கொண்டு விட்டாலும், தலை கனத்து, படுக்கையிலிருந்து எழ முடியவில்லை. உடம்பு முழுவதும் வலி. கண்களில் எரிச்சல். அதனால் தாய் தங்கப்பனிடம், "தம்பி, இன்னிக்கு நீ வேலைக்குப் போக வேணாம். வீட்டுலே இரு. சோறு ஆக்கு. என்னாலே எழ முடியலே" என்றார்.

"சரிம்மா" என்று அவன் சொன்னாலும், லீவு கேட்டால், பண்ணையார் தருவாரா என்பதான சந்தேகம் எழுந்தது. அவனைத் தேள் கொட்டியதற்கே லீவு தர முடியாது என்று சொன்னவர், அவனுடைய தாயைப் பாம்பு கடித்ததற்கு லீவு தந்து விடுவாரா, என்ன?

இருந்தாலும், எப்படியும் லீவு வேண்டும். அம்மாவைக் கவனிக்க வேண்டும். சோறு ஆக்க வேண்டும்.

செத்த பாம்பை எடுத்து, ஒரு சிறு மஞ்சள் பையில் போட்டுக் கொண்டு, பண்ணையாரின் பங்களாவுக்குச் சென்றான்.

பண்ணையார் மேஜை முன் உட்கார்ந்து, அந்தக் காலை நேரத்தில் வரவு, செலவுக் கணக்கை சரிபார்த்துக் கொண்டிருந்தார்.

"யசமான், லீவு வேணும்" என்றான் தங்கப்பன் கையில் மஞ்சள் பையுடன் கும்பிட்டபடி.

நிமிர்ந்து பார்த்த பண்ணையார், தன் தங்க ஃப்ரேம் மூக்குக் கண்ணாடியை சற்றுத் தூக்கிவிட்டபடி அவனிடம், "லீவா? எதுக்கு? இப்ப பாம்பு கொட்டிடுச்சா?" என்று கேட்டார்.

"பாம்பு கொட்டலீங்க. கடிச்சிடிச்சு."

"கடிச்சிடிச்சா?"

"ஆமாங்க."

"உன்னையா?"

"இல்லீங்க. என் அம்மாவைக் கடிச்சிடிச்சங்க."

"உன் அம்மாவை பாம்பு கடிச்சால்,

உனக்கு எதுக்கு லீவு?"

"அம்மா படுத்த படுக்கையா கிடக்காங்க, யசமான். அவங்களைக் கவனிக்கணும். சோறு ஆக்கணும்."

"பொய் சொல்றே. அன்னிக்கு தேள் கொட்டிடுச்சுன்னு லீவு கேட்டே. இன்னிக்கு அம்மாவைப் பாம்பு கடிச்சிடிச்சுன்னு சொல்றே. நம்ப மாட்டேன்."

"உண்மைதான் எசமான், சொல்றேன். அன்னிக்கு தேளைக் கொண்டான்னு சொன்னீங்க. எடுத்து வர முடியலே. இன்னிக்கு பாம்பைக் கொண்டான்னு கேட்பீங்கன்னு தெரியும். எடுத்து வந்திருக்கேன்." மஞ்சள் பையில் கை விட்டு,

"அதை ஏன் இங்கே கொண்டு வந்தே?"

"போன முறை என்னை தேள் கொட்டிய போது, அடிச்சுப் போட்ட தேளைக் கொண்டு வந்தால்தான் லீவு கொடுப்பேன்னு சொன்னீங்க, ஐயா. அதான் இந்தத் தடவை மறக்காமல் அடிச்சுப் போட்ட, பாம்பைக் கொண்டாந்திட்டேன். லீவு வேணும், எசமான்" என்று மனத்தில் எவ்வித கல்மிஷமும் இல்லாமல் கூறி விட்டு, கையிலிருந்த அந்த செத்தப் பாம்பை மேஜை மீது நீளவாக்கில் படுக்க வைத்தான் தங்கப்பன்.

"சரி, சரி. லீவு எடுத்துக்க. ரெண்டு நாளைக்கு நீ வேலைக்கு வர வேணாம்.



செத்த பாம்பை மெதுவாக வெளியே எடுத்தான். அவனது வலது கை இரு விரல்கள் செத்த பாம்பின் வாலைப் பிடித்திருக்க, சுருள் அவிழ்ந்து, அது அந்தரத்தில் தொங்கியது.

"ஐயோ, பாம்பு" அலறினார் பண்ணையார். கால்களை நாற்காலியில் எடுத்து வைத்துக் கொண்டு நின்று விட்டார்.

"செத்த பாம்பு, எசமான். ஒண்ணும் செய்யாது" என்று ஆட்டிக் காட்டினான்.

இனிமேல் இப்படி பாம்பை எல்லாம் எடுத்து வராதே. மேஜை மேலேயிருந்து அந்தப் பாம்பை எடு" நாற்காலியில் நின்று கொண்டே பண்ணையார் கூறினார்.


"தேள் கொட்டினால் கூட செத்த தேளை எடுத்து வர வேணாமா?"


"வேணாம், வேணாம். அந்தப் பாம்பை எடுத்துக்கிட்டு நீ போ" என்றார் பண்ணையார் அவசர அவசரமாக.

மேஜையிலிருந்த பாம்பை மீண்டும் சுருட்டி, மஞ்சள் பையில் போட்டுக் கொண்டு நடந்தான் தங்கப்பன்.


அன்பளிப்பு!

கதை: டி. அருள்குமார், முங்கம்பட்டி.
படம்: மகேஸ்




நடிகர் அருகில் இருந்த இளநீர் கடைக்குச் சென்றார்.
ஒரு இளநீர் வெட்டுப்பா.
எவ்வளவுப்பா?
அஞ்சு ரூபாய்ங்க.
சார்! நான் கொடுக்கறேன்.
நான் குடிக்க நீ எதுக்குக் கொடுக்கணும்?
நான் தான் கொடுப்பேன். இது என் அன்பளிப்பு.
நடிகர் மீண்டும் பேருந்து நிறுத்தத்திற்கு வந்து நின்றார்.
என்ன சார் கோபமாக இருக்கீங்க?
நீ எதுக்குப் பணம் தரணும்.
எவ்வளவு பெரிய நடிகர் நீங்க! உங்களுக்கு அன்பளிப்பு கொடுக்க நான் கொடுத்து வச்சிருக்கணும்.
அன்புன்னா ரெண்டு பேருக்கும் இருக்கணும். இது பற்று.


நீ எவ்வளவு பணம் வச்சிருக்கே?
அஞ்சு ரூபாய் தான் வச்சிருந்தேன்.
அதையும் கொடுத்துட்டே. நடந்தா ஊருக்குப் போவே?
என்னாலே நீ நஷ்டப் பட்டே, இது அன்பு இல்லை.
யாருக்கும் பணம் கொடுக்கக் கூடாதா?
அப்படி சொல்லலை. ஏழைகளுக்கு உதவி பண்ணு.
அவங்க உன் உதவியை மறக்க மாட்டாங்க. நான் கொஞ்ச நேரத்தில் மறந்துடுவேன்.
சார் முன்பை விட இப்ப ரொம்ப உயர்ந்துட்டீங்க.
தவித்தவனுக்குத் தான் தண்ணீர் தரணும்.
புரியுது சார். ரூபாயைத் தாங்க.
வெரிகுட்! இந்தா, எனக்கு இப்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு.
பஸ் வருது. வரேன் சார்.



எழுச்சி ஏற்படும்!

சத்யாவும் கண்ணனும் செஸ் விளையாடிக் கொண்டிருந்தனர். சுரேந்தர் அவர்களை நோக்கி வருவதைப் பார்த்த சத்யா "சுரேந்தர் இன்னிக்கு ஊருக்குக் கிளம்பறதா சொன்னியே, என்னாச்சு?" என்றான்.

"சாயங்காலம்தான் கிளம்பறோம்" என்றபடி நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான்.

"கையில் என்னடா புத்தகம்?"- கண்ணன் கேட்டான்.

"ஊரில் எனக்கு நண்பர்கள் கிடையாது. உங்ககிட்ட இருக்கிற புத்தகங்களைக் கொடுத்திங்கன்னா நான் படிச்சிட்டு பத்திரமா கொண்டு வந்து தரேன்" என்றான் சுரேந்தர்.

"நாங்க கொடுக்கறது இருக்கட்டும். நீ வச்சிருக்கிற புத்தகத்தைக் காட்டு"- கண்ணன்.

"இது தீரன் வேலுத்தம்பியோட வாழ்க்கை வரலாறுடா" என்று நிறுத்தினான் சுரேந்தர்.

"திருவாங்கூர் சமஸ்தானத்தை ஆங்கில ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சிக்குள் சேர்க்க முயற்சிக்கும்போது எதிர்த்து மடிந்த வேலுத்தம்பியோட வரலாறா! எங்கிட்ட கொடு முதலில்" என்று சுரேந்தரிடமிருந்து வாங்கினான் சத்யா.

"இது ஜேசனின் தங்கக் கம்பளப் பயணம். உனக்கு ரொம்பப் பிடிக்கும் சுரேந்தர். கிரேக்க புராணக் கதைகளில் கூறப்படும் ஜேசனின் அற்புதப் பயணத்தை சுவையாகச் சொல்கிறது இந்தப் புத்தகம். அட்டைப்படமும் உட்பக்கப் படங்களும் நன்றாக உள்ளன. இதை வச்சுக்க" என்றான் கண்ணன்.

"வாண்டுமாமா எழுதிய சதுர நீதி நூல்கள் என்ற புத்தகம் வேணுமா?" என்ற சத்யாவிடம், "சதுரநீதி நூல்கன்னா என்னன்னு சொல்" என்றான் சுரேந்தர்.

"ஔவையாரின் மூதுரை நல்வழிக்கும், உலகநாதரின் உலக நீதிக்கும், சிவப் பிரகாசரின் நன்னெறிக்கும் தனக்கே உரிய நடையில் விளக்கம் தந்திருக்கிறார் ஆசிரியர். ஓவியர் செல்லப்பனின் கண்கவர் படங்கள் நூலுக்குச் சிறப்பு. நல்ல தயாரிப்பு."

"அது என்ன புத்தகம்?" என்று அலமாரியை நோக்கிக் காட்டினான் சுரேந்தர்.

"அதுவும் வாழ்க்கை வரலாறுதான்! குமாரசாமி ராஜாவுடையது."

"குமாரசாமி ராஜாவா, யாருடா?" சுரேந்தர் வியப்புடன் கேட்டான்.

"நமக்கு சுதந்திரம் வந்தபோது தமிழ்நாடு ஆந்திரா எல்லாம் ஒரே ராஜதானியாய் இருந்தது. பிரிக்கப்படாத அந்த சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த பி.எஸ். குமாரசாமி ராஜாதான் இவர். மாணவராக இருக்கும் போதே விடுதலைப் போராட்டத்தில் குதித்து, சாதி, மத ஒற்றுமை ஏற்பட பாடுபட்டவர். சுவையான வரலாறு. இதைப் படித்தால் நமக்கெல்லாம் எழுச்சி ஏற்படும்" என்று சொல்லி முடித்தான் கண்ணன்.

"சரி போதும்டா. அம்மா சீக்கிரம் வரச் சொன்னாங்க. ஒரு வாரத்தில் வந்து விடுவேன். தேங்ஸ் சத்யா" என்றபடி புத்தகங்களுடன் நடந்தான் சுரேந்தர்.

- தீரன் வேலுத்தம்பி, கே. சந்தான லக்ஷ்மி, பக்-76, ரூ.15/-, பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.
- ஜேசனின் தங்கக் கம்பளப் பயணம், பேராசிரியர் எ.சோதி, பக்-88, ரூ.20/- நன்மொழிப் பதிப்பகம், 41, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 3.
- சதுர நீதி நூல்கள், வாண்டுமாமா, பக்-150, ரூ. 40/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17.
- குழந்தைகளுக்கு குமாரசாமிராஜா, ரஜனி பெத்து ராஜா, பக்-88. ரூ. 24/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

— ரே.


வருடத்தில் ஒரு சீசனில் மட்டும்தான் நெருப்புக் கோழி முட்டையிடும். 40 நாட்கள் அடைகாக்கும். கோழி முட்டையை விட 24 மடங்கு பெரியது இதன் முட்டை. குஞ்சுகள் வளர மூன்றாண்டுகளாகும். மணற்பாங்கான பகுதிகளில் வசிக்கும் இயல்புடையது.

ஆதாரம் : அறிவோம் அறிவியல்

– ஏ. எல். பாத்திமா,
காரைக்கால்.

போலீஷியா என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஆறுதல் என்று பொருள். அதிலிருந்துதான் போலீஸ் என்ற வார்த்தை வந்தது. முதன் முதலில் போலீஸ் படையை நிறுவியவர்கள் நார்மன்கள். ஆனால் இப்போதுள்ளது போல போலீஸ் உருவானது 1820ல்தான்!

– ஆர். பிரகாசம்,
மருதாடு.



பிருந்தாவனம்

பற்களைச் சுத்தப்படுத்தும் பறவை!

துக்கச் சின்னமாக கறுப்புப் பட்டை அணிவது நமது வழக்கம். சீனாவில் துக்கச் சின்னமாக வெள்ளை நிற பாட்ஜ் அணிகிறார்கள். துருக்கியில் நீலம், எகிப்தில் மஞ்சள் நிறம்.

ஆதாரம் : அறிவூட்டும் அபூர்வச் செய்திகள் 2000


– மலர் சூர்யா,
வில்லியனூர்



உலகில் சிறைச்சாலை இல்லாமல் ஒரு நகரம் இருக்கிறது. கிறிஸ்துவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்ற போப் ஆண்டவர் இருக்கும் 'வாடிகன்' நகரம் தான்! சிறைச்சாலை மாதிரியான எந்த அமைப்பும் கிடையாது. யாரையும் இங்கு சிறையிட்டதில்லை.

உலகில் உள்ள தேசியக் கொடிகளிலேயே மிகப் பழமையானது டென்மார்க் நாட்டு தேசியக் கொடிதான். சிகப்பு நிற பின்னணியில் வெள்ளைச் சிலுவை பொறிக்கப்பட்ட இந்தக் கொடி 1219–ஆம் ஆண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

– ஆர். சுமதி,
நாமகிரிப்பேட்டை.






ஜப்பானில் நேரத்தைக் காட்டும் நவீன எலக்ட்ரானிக் கடிகாரங்களைத் தயாரித்து வரும் நிறுவனம் ஒன்று புதிதாக அதிசயக் கடிகாரம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்தக் கடிகாரம் நேரத்துக்கு நேரம் உலக மக்கள் தொகை அதிகரித்து வருவதைக் காட்டும். இதுபோன்ற ஒரு கடிகாரம் ஐ.நா. சபை பொதுச் செயலாளருக்கு ஜப்பான் அரசு கொடுத்தது.


ஐ.நா. சபை உறுப்பு நாடுகளுக்கும் இது மாதிரியான கடிகாரங்களை வழங்க ஜப்பான் ஏற்பாடு செய்து வருகிறது.

–ஆர். ஆர். பூபதி,
திண்டுக்கல்.



- 1870-ஆம் ஆண்டு கல்கத்தாவில் ரூபாய் நோட்டு அச்சிடப் பட்டது.
- ஜப்பான் பாராளுமன்றத்தின் பெயர் டயட்.
- திரவ உலோகம் பாதரசம்.
- நோபல் பரிசு உருவாக்கிய நாடு ஸ்வீடன்.
- தொல்பொருள் இலாகாவை முதலில் ஏற்படுத்தியவர் கர்சன் பிரபு.
- செயற்கை மழை உருவாக்க பயன்படுவது சில்வர் அயோடைட்.

– ஜெ. சண்முகசுந்தரி,
பதினோராம் வகுப்பு, அரசு
உயர்நிலைப் பள்ளி,
விருத்தாசலம்.




புளோவர் என்ற சிறிய பறவை முதலையின் திறந்த வாயில் புகுந்து பற்களுக்கு இடையே அகப்பட்டிருக்கும் இறைச்சியை உணவாக உண்ணும். புளோவர் தன் பற்களைச் சுத்தம் செய்வதால் முதலை அவற்றிற்குத் துன்பம் தருவதில்லை.

– க. பூங்கொடி,
சித்தோடு.

தேக்கு மரத்தைக் கறையான் அரிக்காததற்குக்காரணம் அதிலுள்ள ஒரு வகைக் குங்கிலியம் போன்ற எண்ணெய்ப் பசைதான். தேக்கு மரத்தை அறுக்கும்போது ஒருவகை மணம் வரும். அந்த மணத்திற்குக் காரணமும் அந்த எண்ணெய்ப் பசைதான். அது இருப்பதால்தான் கறையான் அதனிடம் அண்டுவதில்லை. மேலும் சில மரங்கள் மீது மழைக் காலத்தில் காளான் முளைத்திருக்கும். ஆனால் தேக்கு மரத்தின் மீது காளான் முளைப்பதில்லை. அத்துடன் இரும்பின் மீது தேக்குமரம் படுமானால் அந்த இடத்தில் இரும்பு துருப்பிடிக்காது. இதற்கெல்லாம் காரணம் அந்த எண்ணெய்ப் பசைதான். இதனாலேயே தேக்கு மரத்தை உயர்ந்த மரம் என்று குறிப்பிடுகின்றனர்.

– ஏ.கே. நாசர்.





● நமது உடலில் உள்ள கொழுப்பில் ஏழு குளியல் சோப்புகளைத் தயாரிக்க முடியும்.

● சாதாரண நேரங்களில் நம்முடைய இதயம் 70 முதல் 80 தடவை ஒரு நிமிடத்தில் துடிக்கிறது. ஆனால் விளையாட்டுகளில் ஈடுபடும் போது 150 தடவை வரை துடிக்கிறது.

● நமது கண்கள் மூலமாக ஒரு நாளைக்கு 1.5 மில்லியன் செய்திகள் வரை சேகரித்து மூளைக்கு அனுப்ப முடியும்.


● ஒரு நாளைக்கு நாம் 23,040 தடவை மூச்சு விடுகிறோம். 4300 வார்த்தைகள் பேசுகிறோம்.


– துரை. கார்த்திக்,
மன்னார்குடி.

இறந்த அல்லது வீரியம் குறைந்த கிருமிகளை உடலுக்குள் செலுத்தும் முறைக்கு வாக்சினேஷன் என்று பெயர். பசுவைக் குறிக்கும், 'வக்கா' என்னும் சொல்லிலிருந்துதான் இப்பதம் வந்தது. இம்முறையை முதன் முதலில் பயன்படுத்திய எட்வர்ட் ஜென்னர் பசு அம்மைக் கிருமிகளைத்தான் உடலில் செலுத்தினார். குறிப்பிட்ட ஒரு நோய்க்கு எதிர்ப்பாற்றலை உடல் இதனால் உண்டாக்கிக் கொள்கிறது.

ஆதாரம் : சிறுவர் கையடக்க அறிவியல் களஞ்சியம்

நெ. இராமன்,
சென்னை.






கிரேக்க நாட்டில் டெமாஸ்தனீஸ் என்ற ஒரு மனிதர் இருந்தார். அவர் திக்கித் திக்கிப் பேசியதால் அவரை எல்லோரும் பரிகாசம் செய்தனர். அவரோ மேடைப் பேச்சாளராக விரும்பினார். மலையின் மீது சென்று சிறு கூழாங்கற்களைப் பார்த்து பேசிப் பழகினார். கிரேக்க வரலாற்றிலேயே சிறந்த பேச்சாளர் என்னும் பெயர் பெற்றார்.

ஆதாரம் : மேதைகளின் வாழ்விலே என்ற நூலில்.

– க. கண்மணி,
மிட்டூர்.

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

3. கேரளாவில் பேசப்படும் மொழி (5)

7. அண்மையில் இவரின் சாதனையை வால்ஷ் முறியடித்தார் (3)

9. பூட்டிற்கு இது இல்லையென்றால் பயன் இல்லை (2)

12. இந்தப் பூனையின் முதல் பாதி பெயரில் இருந்து வாசனைப் பொருள் தயாரிக்கப்படுகிறது (3)

10. அறுபடை வீடுகளைத் தவிர இந்த மலையிலும் முருகன் குடி கொண்டுள்ளான் (5)

13. இந்தியாவின் தலைநகரம் (3)

14. ரசகுல்லா என்றதும் நினைவிற்கு வரும் ஊர் (5)

17. பாரி இந்தக் கொடிக்குத்தான் தேர் கொடுத்தான் (3)

வலமிருந்து இடம்

2. உலர்ந்த இஞ்சி (3)

5. கடலில் குறைந்த தூரங்களுக்குச் செல்லவும் மீன் பிடிக்கவும் இது பயன்படுகிறது (3)

6. சினம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

8. மரங்கள், செடிகள் பூத்துக்குலுங்கும் இடத்தை இவ்வாறு அழைக்கலாம் (2)

11. கடுமையான குற்றங்களுக்கு விதிக்கப்படும் அதிகபட்ச தண்டனை (3)

மேலிருந்து கீழ்

1. காவிரி தோன்றும் இடம் (5)

3. விதியை இதால் வெல்லலாம் எனக் கூறுவார்கள் (2)

4. மழை வேண்டுமென்று முனிவர்கள் ______ நடத்தியிருக்கிறார்கள் (3)

7. சமையலுக்குப் பயன்படும் அவசியமான பொருள். இதிலிருந்து எண்ணெய்யும் எடுக்கப்படுகிறது (3)

கீழிருந்து மேல்

5. நூல் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள் (3)

6. இது வீட்டு வாசலை காலையிலும் மாலையிலும் அலங்கரிக்கும் (3)

11. மழையின் ஆரம்பம் (3)

14. தானியங்களில் ஒன்று (3)

15. பறவைகளின் அரசன். பாம்புக்கு எதிரி (3)

16. சாலைகள் போடும்போது கற்களுடன் இதையும் சேர்த்துப் போடுவர் (2)

17. மண்டியிடுதல் என்பதை ______ போடுதல் என்றும் சொல்லலாம் (3)

விடை 76 பக்கம்


— எஸ். கவிதா,
திருநெல்வேலி

"ஐயா! எனக்கொரு வேலை வேண்டும்" என்று கேட்டான் செல்வம்.

வந்தவனை ஏற இறங்கப்பார்த்த உலகநாதர், ''சாமர்த்தியசாலிதான்! அரண்மனைக்குள் வந்தால் பார்க்க முடியாதென்று என் சகோதரி வீட்டு வாசலில் என் வருகை அறிந்து கோரிக்கை விடுக்கிறாய்! சரி, என்ன வேலை தெரியும் உனக்கு?'' என்று கேட்டார்.

''எந்த வேலை கொடுத்தாலும் அதன் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு சிறப்பாகப் பணியாற்றுவேன். சோதித்துப் பார்த்து முடிவெடுங்கள்'' என்றான்.

உலகநாதர் புன்னகையுடன், "சொல்லிலிருக்கும் நேர்த்தி செயலிலிருக்கிறதா என்று பார்க்கலாம்! என் குதிரை தூய





மாலதி

வெண்மையானது. காவலர்களை அடிக்காமல் உதைக்காமல் அதைக் கவர்ந்து சென்று அதன் மேலேறி நாளை நான் அரசவைக்குள் பிரவேசிக்கு முன்வரவேண்டும். முடியுமா?'' என்றார்.

காவலர்களை ஏமாற்றிய பாட்டி!

"நாளைக் காலை சந்திக்கலாம்'' என்று வணங்கி விடைபெற்றான் செல்வம்.





சிறிது நேரம் தங்கையிடம் உறவாடிவிட்டு நேரே குதிரை லாயத்துக்குச் சென்றார் உலகநாதர். அங்கிருந்த ஏவலர்களிடம், "இன்று இரவு ஒரு திருடன் எனது குதிரையைத் திருடப் போவதாக ஒரு வதந்தி. அதனால் திறமைசாலியான பத்து பேர் மாற்றி மாற்றி குதிரையில் அமர்ந்து காவல் காக்க வேண்டும். குதிரையைச் சுற்றி ஒன்பது பேர் உருவிய வாளுடன் விழித்திருக்க வேண்டும். அசட்டையாகக் குதிரையைக் கோட்டை விட்டால் கடும் தண்டனை கிடைக்கும்'' என்று கடுமையாக எச்சரித்துச் சென்றார்.

உலகநாதர் சொன்னபடி குதிரைமேல் ஒருவரும் சுற்றி ஒன்பது பேருமாய் காவலிருந்தனர். அரைமணிக்கொருமுறை குதிரையிலிருப்பவர் மாறினர்.

குளிர்காலமானபடியால் கொட்டடி வாசலில் சுள்ளிகளைப் போட்டு தீ மூட்டி காவலர்கள் குளிர்காய்ந்தனர்.

இதையெல்லாம் ரகசியமாக துப்பு விசாரித்துத் தெரிந்து கொண்டான் செல்வம். இரவு ஊரடங்கிய பிறகு கிழவியைப் போல் நூல்புடவை கட்டி நரைத்த முடி, நரைத்த புருவம், பற்களுக்குக் கறுப்பு வண்ணம் என்று தன்னை உருமாற்றிக் கொண்டான். ஒரு கையில் கம்பு ஊன்றி இடுப்பில் கூடையுடன் குதிரைக் கொட்டடிக்குச் சற்றுத் தள்ளி உட்கார்ந்தான்.

தலை, உடம்பு, கை, கால், பற்கள் எல்

லாம் வெடவெடத்தன. "பாவம், பாட்டி! வயதான காலத்தில் ராத்திரி நேரத்தில், நடுக்கும் குளிரில் வியாபாரம் செய்ய வந்திருக்கிறாளே!" என்று இரக்கப்பட்டான் ஒருவன்.

"பாட்டிக்கு யாரும் இருந்திருக்க மாட்டார்கள்" என்று பதில் சொன்னவன், "பாட்டி! இந்தக் கணப்புக்கு வா" என்று அழைத்தான்.

"வம்பை விலைக்கு வாங்காதே!" என்று எச்சரித்தான் மற்றொருவன்.

முதலில் பேசியவன் ஏளனமாகச் சிரித்தபடி, "புறங்கையால் தள்ளினால் பாட்டி பரலோகம் போய் விடுவாள். இவள் நம்மையெல்லாம் புரட்டி எடுத்து விடுவாளா? காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்!" என்றான்.

இதற்குள் பாட்டி உருவில் இருந்த செல்வம் தள்ளாடியபடி வந்து சேர்ந்தான். "நீங்கள் எல்லாம் மமமகராசனாக இருக்கணும்" என்று பற்கள் தந்தியடிக்க வாழ்த்தினாள்.

பாட்டியை எல்லோரும் சூழ்ந்து கொண்டு குசலம் விசாரித்தனர். இரக்கம் வரும்படி பொருத்தமான பதில்களைச் சொன்னாள் பாட்டி.

"நீ என்னைப் போல வெத்திலை பாக்கு போடற ஆளுன்னு உன்னோட காவிப் பல்லு காட்டிக் கொடுக்குதே! இந்தா மென்னு துப்பு... சங்கோஜப் படாதே! கேட்டு வாங்கிக்கோ" ஆளுக்குத் தகுந்த மாதிரி வியாபாரம் செய்தாள் கிழவி.

"பாட்டி! இன்றைக்கு இதை விட்டு எழுந்தால் எங்க எஜமானர் தலையை வாங்கிடுவார். பணம் நாளைக்கு வாங்கிக்கிறதானா ரெண்டு அதிரசம் கொடு" என்று கறாராகப் பேசினான் ஒருவன்.

"நாளைக்குத்தான் கொடேன். நாமெல்லாம் உழைக்கிற ஜாதி. அசைபோடலைன்னா வேலை நடக்குமா? இந்தா, அட உங்கம்மா மாதிரி நெனைச்சிக்கோ" பாட்டியின் பேச்சு காவலர்கள் மனத்தை ஈர்த்தது.

"பாட்டி! பாட்டில்லே என்ன?" ஆர்வத்தோடு கேட்டான் ஒருவன்.

பாட்டி, "பழச்சாறுடா கண்ணு! கொஞ்சமா ஊத்திக்க" என்று ஒரு பாட்டிலைத் திறந்து நீட்டினாள்.

குதிரை மேலிருந்தவன், "அவங்களே காலி பண்ணிடப் போறாங்கடா! எனக்கும் ஒரு பாட்டில் வாங்கிக் கொடுடா" என்று கத்தினான். சிறிது நேரத்தில் பழச்சாற்றில் கலந்திருந்த மயக்க மருந்தால் எல்லோரும் மயங்கிச் சாய்ந்தனர். செல்வம் சுறுசுறுப்பாய் எழுந்து நாமக் கட்டியை உரசி நாமத்தை எல்லோர் நெற்றி



யிலும் தீட்டினான்.

குதிரை மேலிருந்தவன் இடுப்பில் கயிறு கட்டி அதன் முனையை உத்திரத்தில் கட்டி தவழ்வது போல் தொங்க விட்டான். மூன்றாம் ஜாம ஆரம்பத்தில் குதிரை மேலேறிப் பறந்து விட்டான் செல்வம்.

தூக்கம் வராமல் புரண்ட உலகநாதர் நான்காம் ஜாமத்தில் குதிரை லாயத்திற்கு வந்தார். எல்லோர் நெற்றியையும் பார்த்தார்.

கொஞ்சமாகக் குடித்தவர்கள் எழுந்து கொண்டனர். அவர்கள் தண்ணீரை அடித்து மற்றவர்களை எழுப்பினர். தள்ளாடிய கிழவி ஆண் என்பதை அவர்கள் மூளை நம்ப மறுத்தது.



தோட்டத்தில் சில காவலர்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந் தனர்.

காற்றுக்காக ஒரு சிறு சாள ரத்தைத் திறந்து வைத்தார். மெத்தையின் மேல் பட்டு சால் வையை விரிக்காமல் அடியில் விரித்து அதன் நான்கு முனைகளையும் நான்கு கால்களில் கட்டினார். தூங்காமல் கையில் கட் டாரியுடன் சாளரத்தைப் பார்த்து அமர்ந்து கொண்டார்.

அந்த நாளில் ஊர் எல்லையில் மரண தண் டனை பெற்ற கைதி களைத் தொங்க விட்டிருப் பார்கள். பிணம் அழுகி னாலே தகனம் செய்வார் கள். நாட்டினர் இதைப் பார்த்தால் குற்றம் குறை யும் என்பது அரசரின் நம்பிக்கை.

மறுநாள் உலகநாதர் முன் குதிரை யோடு வந்து நின்றான் செல்வம்.

''எதையும் மும்முறை பரீட்சிப்பது உலக நியதி. ஏவலர்களை ஏமாற்றுவது சுலபம். இன்றிரவு நான் மெத்தை மேல் விரித்திருக்கும் பட்டு சால்வையையும் என் மனைவியின் விரலில் உள்ள வைர மோதிரத்தையும் கவர்ந்து சென்று உன் திறமையை உறுதிப்படுத்து. சாளரத்தில் ஏதாவது தலை தெரிந்தாலும் கட்டா ரியை வீசுவேன். உயிர் போனால் அதற்கு நான் ஜவாப்தாரியல்ல. கூட்டமாக வந்தா லும் நீ தோற்றதாகத்தான் அர்த்தம்'' என் றார் உலகநாதர்.

அவரை வணங்கி விடைபெற்றான் செல்வம். அரண்மனை வந்த உலகநாதர் தம் மனைவியிடம் எல்லாவற்றையும் விவரமாகக் கூறி ஜாக்கிரதையாக இருக் கும்படிச் சொன்னார்.

இரவாயிற்று. உலகநாதர் சிக்கிரமே சாப்பிட்டுக் கதவுகளைத் தாளிட்டார். வாயிலில் நான்கு காவலர்களை நிறுத்தி, ''என்ன சத்தம் கேட்டாலும் இந்த இடத்தை விட்டு அசையக் கூடாது'' என அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

அங்கே போய் ஆராய்ந்தான் செல்வம். நான்கு பிணங்கள் தொங்கிக் கொண்டிருந் தன. ஒன்று அவன் உயரம் பருமனுக்கு ஒத்து வந்தது. ஊர் அடங்கியதும் அதை அவிழ்த்து எடுத்துக் கொண்டான். தன் உடையை அதற்கு அணிவித்தான். காவ லர் அயர்ந்த நேரம் தோட்டத்திற்குள் குதித்துப் பதுங்கி அரண்மனையை ஆராய்ந்தான். ஒரே ஒரு சிறு சாளரம் திறந்திருப்பது கண்டு அதுதான் உலக நாதர் நமக்கு வைத்திருக்கும் பொறி என்று தெரிந்து கொண்டான்.

மெதுவாக சுழிவுக் குழாயைப் பிடித் துக் கொண்டு மேலேறி பிணத்தின் முகத்தை சாளரத்தில் காட்டினான். செல் வம் எட்டிப் பார்ப்பதாக நினைத்த உலக நாதர் கட்டாரியை வேகமாக வீசினார். பிணத்தைப் போட்டு விட்டு செல்வம் சடா ரென தோட்டத்தில் பதுங்கிக் கொண் டான்.

காவலர்கள் பிணத்தைச் சூழ்ந்து கொண்டனர். வெட்டுப்பட்டு முகம் சிதைந்திருந்தது. அங்கு வந்த உலகநாதர், ''இவன் வெட்டி வீராப்புப் பேசி அற்பாயு ளில் மடிந்து விட்டான். எலி, மலையில்

மோதினால் மலை சேதமடையுமா? இவனை நாமே தகனம் செய்து விடுவோம்" என்று கூறினார். ஒருவன் பிணத்தைச் சுமந்து வர, மற்ற காவலர்கள் விறகு, வறட்டி, மண்ணெண்ணெய், தீப்பெட்டி எல்லாம் எடுத்துக் கொண்டு சுடுகாட்டுக்குச் சென்றனர். உலகநாதரின் பார்வையில் பிணத்தைத் தகனம் செய்தனர்.

உலகநாதர் அரண்மனை வாசலில் வழக்கம் போல் இருவரே காவலிருந்தனர். சவால் விட்டவன் செத்து விட்டான் என்ற நிம்மதியில் சிறிது நேரத்தில் அவர்களிடமிருந்து குறட்டை வந்தது.

செல்வம் மெதுவாக அரண்மனைக்குள் சென்றான். கூடத்திலிருந்த நிலைக் கண்ணாடியில் தன்னை ஒழுங்கு பண்ணிக் கொண்டு உலகநாதரின் படுக்கை அறையை ஓசைப்படுத்தினான்.

வெளியே வந்த அவர் மனைவி, "நீ யார்?" என்று கேட்டாள். "அம்மா! நான் ஐயாவின் அந்தரங்க ஊழியன். ஐயா! சுடுகாட்டுக்குப் போயிருக்காங்க. செத்துப் போறவங்க கடைசியிலே எதற்கு ஆசைப்பட்டாங்களோ அதையும் போட்டு எரிச்சுடணுமாம். இல்லாட்டி பிசாசாக மாறி தொந்தரவு பண்ணலாம் என்று ஐயா அபிப்ராயப்படறாங்க. அதனாலே மோதிரத்தையும் சால்வையையும் வாங்கிட்டு வரச் சொன்னாங்க" என்று பணிவுடன் குழைந்தான்.

"அதுவும் சரிதான்! எனக்குப் பேய், பிசாசுன்னா ரொம்பப் பயம்" என்றபடி வைர மோதிரத்தைக் கழட்டிக் கொடுத்தவன், மெத்தையைக் கீழே தள்ளி, நான்கு முடிச்சுக்களையும் அவிழ்த்தான். செல்வமும் உதவி செய்தான். இரண்டையும் பெற்றுக் கொண்ட செல்வம், தன் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தான்.

உலகநாதர் மயானத்திலிருந்து திரும்பி அரண்மனை வந்தபோது மனைவி அயர்ந்து தூங்குவதைக் கண்டார். மற்றதைக் காலையில் பேசிக் கொள்ளலாம் என்று அவரும் படுத்து உறங்கினார்.

சூரியன் உதயமானான். அவருக்கு முன் எழுந்து நீராடி பூஜை முடித்திருந்த அவரது மனைவி, உலகநாதர் கண் விழித்ததும், "ப்ளூ ஜாகர் வைரம் என்றாலும் நெருப்பிலே போட்டால் கரியாகி விடுமா? அந்தச் சால்வை காஷ்மீரத்திலேயிருந்து எங்கண்ணன் பரிசா வாங்கிட்டு வந்தது. ஹூம்!" என்று பெருமூச்செறிந்தாள்.

உலகநாதர் திடுக்கிட்டார்.

"என்ன உளறுகிறாய்" என்று துள்ளி எழுந்து மெத்தையின் கீழ் பார்த்தார். வெறிச்சென்றிருந்தது.

"சால்வையை என்ன செய்தாய்?" என்று கத்தினார். அவர் மனைவி பயத்தோடு, "நேற்று ராத்திரி நீங்கதானே உங்க அந்தரங்க ஊழியனை அனுப்பி அதையும் மோதிரத்தையும் வாங்கிட்டு வரச் சொன்னீங்க" எனவும் அவருக்குப் புரிந்து விட்டது, தான் மறுபடியும் தோற்று விட்டோமென்று!

"உள்ளே வரலாமா?" என்ற குரல் கேட்கவும், "இவன்தான்! இவன்தான் இரண்டையும் வாங்கிட்டுப் போனவன்" என்றாள் உலகநாதர் மனைவி.

சால்வையையும் மோதிரத்தையும் உலகநாதரிடம் கொடுத்தான் செல்வம்.

"அப்போ கடைசி நேரத்திலே எரிக்க மனசு வரலையா?" என்று மனைவி கேட்க,


"செத்தது யார்?" என்று சினத்தோடு கேட்டார் உலகநாதர்.

"இரண்டு நாட்களுக்கு முன் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பிணம்" என்று கூறி நடந்ததை விளக்கினான் செல்வம்.

"மூன்றாவது சோதனை என்ன?" என்று அவன் கேட்க, "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதம். போதுமப்பா! மூன்றாவது தடவை ஏமாற நான் தயாரில்லை. இந்நாட்டு ஒற்றனாக இப்போதே நீ வேலையில் சேர்ந்து விட்டாய்!" என்றார் உலகநாதர்.

"தாத்தா, எனக்கு ஒரு கடிஜோக் சொல்லுங்க"

"எனக்குத்தான் பல்லே இல்லையேடா!" **– எம். வினோத்**



அழ. வள்ளியப்பா நினைவுப்
பரிசுப் போட்டியில் இரண்டாவது
பரிசு பெறும் இரண்டாவது கவிதை

இலவு காத்த கிளி!


நடக்கும் என்றே எதிர்பார்த்து,
நாளும் கனவு காணாதே!
நடக்கா விட்டால் மனஞ்சோர்ந்து,
நடையும் தளர்ந்து வாடாதே!


கிடைக்கும் என்றே எதிர்பார்த்து,
கிழக்கும் மேற்கும் அலையாதே!
கிடைக்கா விட்டால் மனஞ்சோர்ந்து,
கீழாம் வழியை நாடாதே!

இலவங் காயைப் பழமென்றே,
ஏங்கிக் காத்த கிளியதுவும்;
பலநாள் கழித்து வெடித்தவுடன்
பஞ்சாய்ப் போக ஏமாறும்!

கிட்டும் பொருளைக் காத்துவிடு,
கிட்டா தாயின் விட்டுவிடு,
எட்டும் என்றால் முயன்றுவிடு,
எட்டா தாயின் விட்டுவிடு!

— வ. நஞ்சுண்டன், திடுமல்
நாமக்கல் மாவட்டம்






அசையாத ஆமை!

கோடை விடுமுறையைக் கழிக்க கோவை சென்றிருந்தோம். ஒருநாள் உயிரியல் பூங்காவிற்குப் போனோம். அங்கு வெளிநாட்டு ஆமை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. பூங்கா அதிகாரி அதைப் பற்றிய தகவல்களைச் சொன்னார். ஆமை அசையாமல் இருந்தது. ஒரு சிறிய குச்சியால் அதை மெதுவாகத் தட்டினார். அப்போதும் அது அசையாமல் இருந்தது. உடனே என் குறும்புக்காரத் தம்பி, "ஆமைக்குள்ளிருந்த பேட்டரி வீக் ஆயிடுச்சு. அதான் அசையாமலிருக்கு" என்று சொன்னதும் அனைவரும் சத்தம் போட்டு சிரித்து விட்டோம். அந்தச் சிரிப்பு சத்தத்தைக் கேட்ட ஆமை மெதுவாக நகர்ந்தது.

– அரிச்சந்திரன், சென்னை – 4.



நீளமாயிருக்கு...

நானும் என் நண்பனும் துவைப்பதற்காகக் குளத்திற்குச் சென்றோம். நான் துணிகளைத் துவைத்து முடித்து நீலம் போட்டுக் கொண்டிருந்தேன். கையில் என் தம்பியின் வெள்ளைச் சட்டை இருந்தது. என் நண்பன், "நீலமா இருக்கு?" என்று கேட்டான். நான் உடனே, "இந்தச் சட்டை சின்னதாகத்தானே இருக்கு" என்றேன். நான் கிண்டல் செய்வதாக நினைத்துக் கொண்டு, "உங்க சட்டை எப்படியிருந்தால் எனக்கென்ன? வெள்ளைத் துணிக்குப் போட நீலம் வச்சிருந்தால் கொடு" என்றான் கோபத்துடன். "உண்மையிலேயே நீளம்னுதான் நினைச்சேன்" என்றபடி நீலத்தைக் கொடுத்தேன்.

– ப. காளிதாசன், நீர்விளங்குளம்.




எழுப்புங்கள்!

வீட்டில் உறவினர்கள் வந்திருந்தனர். படுக்க இடம் இல்லையென்று அப்பா மொட்டை மாடிக்குச் சென்றார். தம்பியும் மொட்டை மாடியில் படுத்துக் கொள்வதாகக் கூறிக் கிளம்பினான். "மழை வருகிற மாதிரி இருக்கு. நீ இங்கேயே படுத்துக்க" என்றார் அம்மா தம்பியிடம். "அம்மா! மழை வந்தால் என்னை எழுப்பி விடுங்க. நான் கீழே வந்து படுத்துக்கறேன்" என்றான் தம்பி. அவன் பதிலைக் கேட்டு அனைவரும் சிரித்தனர். "ஏண்டா, மழை பெய்தால் கூடத் தூக்கம் கலையாதா? ஒருவர் வந்து எழுப்ப வேண்டுமா?" என்று மாமா கிண்டல் செய்யவும் தம்பிக்கு வெட்கம் தாங்கவில்லை!

– ம. மகேஷ், நங்கவள்ளி, சேலம்.





எங்கள் ஊரில்






வடை!

எங்கள் பாட்டி வீட்டில் விசேஷம். ஊரிலிருந்து நிறைய பேர் வந்திருந்தனர். சாப்பாடு போட ஆரம்பித்தார்கள். என் மாமா வரிசையாக எல்லோருக்கும் ஒரு வடை வைத்துக் கொண்டு வந்தார். எனக்கோ வடை என்றால் ரொம்பப் பிடிக்கும். உறவினர்கள் மத்தியில் அதிக வடைகளைக் கேட்கத் தயக்கமாக இருந்தது. மாமா அருகில் வந்ததும் "மாமா! எனக்கு மூணு வடை போதும்" என்றேன். சட்டென சிரித்த மாமா, "டேய் வடை வேணும்னா நேரடியாகக் கேட்க வேண்டியதுதானே? மூணு போதும்ங்கறே. எல்லோருக்கும் நாலு வடையா வச்சிட்டு வரேன்!" என்றார். எல்லோரும் என்னைப் பார்த்து சிரித்தனர். எனக்கு மாமாவின் மேல் கோபமாக வந்தது.

– ந. துரை, வெள்ளையாம்பட்டு.



என்ன ஃபேன்?

எங்கள் பக்கத்து வீட்டுப் பையன் ரொம்பச் சிறியவனாக இருந்தாலும் நன்றாகப் பேசுவான். ஒருநாள் சந்தோஷமாக ஓடி வந்து "அக்கா எங்க வீட்டில் புதுசா ஃபேன் வாங்கியிருக்கோம்" என்றான். உடனே நான், "டேபிள் ஃபேனா, சீலிங் ஃபேனா?" என்றேன். "நீங்க சொல்ற ஃபேன் வாங்கலை. ராலி ஃபேன்தான் வாங்கியிருக்கோம்" என்றானே பார்க்கலாம்! என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

– ஆர். சுமதி, நாமகிரிப் பேட்டை.

மனம் வந்தால் சிரிப்பீங்களே!

தண்ணீர் அதிகம்!

என் தம்பிக்குப் பெரியம்மா வண்ண மீன்களை வளர்க்கச் சொல்லி வாங்கிக் கொடுத்தார். தொட்டியில் அவன் தினமும் புதுத் தண்ணீர் ஊற்றி வைப்பான். நான் அவனுக்குத் தெரியாமல் இன்னும் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி வைப்பேன். இதை அறியாத தம்பி ஒருநாள் அம்மாவிடம், "அம்மா நான் தினமும் குறிப்பிட்ட அளவு தண்ணீர்தான் ஊத்தறேன். மீன் குடித்தால் தண்ணீர் குறையலாம். எப்படி அதிகமாகும்?" என்றான். அருகில் இருந்த நான், "நீ தொட்டியிலே அடைச்சு வச்சிருக் கிறதால மீன் அழுது தண்ணீர் கூடுதுன்னு நினைக்கறேன்" என்று சொல்லிச் சிரித்து விட்டேன். உடனே அம்மா, "எல்லாம் உன் வேலை தானா?" என்றார். நான் இடத்தை விட்டு அகன்றேன்.

– எஸ். லாவண்யா, சீர்காழி.

நடந்தது!

மூன்றாவது கண் உருவானது எப்படி?

வேணுவாரியத்




அடுத்த நொடி உலகம் இருளில் மூழ்கியது.
சூரியன் ஒளியை இழந்தது.
அனைத்து ஜீவராசிகளும் அஞ்சி ஓடின.
உடனே சிவனின் நெற்றியிலிருந்து சக்திவாய்ந்த ஒளிப் பிழம்பு கிளம்பியது.
பனி படர்ந்த கைலாச மலை முகடுகள் கட்டுக்கடங்கா நெருப்புப் பிழம்பால் உருக ஆரம்பித்தன.
ஸ்வாமி! இங்கு எல்லாம் உருகுகின்றன.


ஸ்வாமி அனைத்தும் எரிந்து சாம்பலாகின்றன. கருணை கூர்ந்து நெற்றிக் கண்ணால் பார்ப்பதை நிறுத்துங்கள்!
சிவனின் முகத்தில் புன்னகை தோன்றியது.
தேவியின் வேண்டுகோளுக்கிணங்க பழைய நிலைக்கு மாற்ற வேண்டும்.
சிவன் மலை முகடுகளைப் பழைய நிலைக்கு மாற்றினார்.
பார் தேவி!
அற்புதம்!
தேவி சிவனிடம் வேண்டினார்.
ஸ்வாமி! எதற்காக மூன்றாவது கண்ணை உருவாக்கினீர்கள் என்று சொல்லுங்கள்.
தேவி, விளைவை எண்ணிப் பாராமல் கண்களை மூடினாய். உலக ஜீவராசிகள் எல்லாம் திடீரென ஏற்பட்ட இருளைக் கண்டு பயந்தன.



சூரியனும் சந்திரனும் என் கண்கள். திடீரென சூரியன் மறைந்தவுடன் ஏற்பட்ட பயத்தைப் போக்கவே மூன்றாவது கண்ணை உருவாக்கினேன்.
ஆனால் மூன்றாவது கண்ணால் கைலாசத்திற்கு ஒன்றும் ஆகாது.
அப்படியென்றால் ஏன் பழைய நிலைக்குக் கொண்டு வந்தீர்கள்?
பனிமலைகளின் அரசனான உன் தந்தை ஹிமாவனுக்கு மனவேதனை ஏற்படக் கூடாதே!
நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன் ஸ்வாமி.

1 செந்திலைச் சந்தியுங்கள்...!



பத்தாம் வகுப்பு படிக்கும் செந்திலுக்குக் குரூபச் சொரூபம்! கறுப்பு நிறம். உதட்டை மீறி முன் துருத்தும் மேல் வரிசைப் பற்கள். அகன்ற மூக்கு. லேசாக மாறு கண் வேறு. எதுவும் பாக்கி இல்லை. செந்திலுக்கு மொத்தமாக ஹோல்சேலில் அள்ளிக் கொடுத்து விட்டார் கடவுள்!

டடங்..! டடங்...! ஈஸ்வரன் கோவில் மணியோசையில் டக்கென்று விழித்துக்கொண்டான் செந்தில். அதிகாலையில் எழும் இனிய மணியோசையில் விழித்துக்கொள்வது எவ்வளவு பாக்கியம்!

உற்சாகத்துடன் செந்தில் எழுந்துகொண்டான். மெல்ல நடந்து வழக்கம் போல் ஜன்னலை அடைந்தான். முகத்தில் செல்லமாக மோதும் மெல்லிய குளிர் காற்றில் சிலிர்த்தான். வானம் வெளுப்பதற்கு நிறைய நேரமிருந்தது.

ஜன்னல் வழியாகத் தெரிந்த ரம்யமான காட்சியில் மெய் மறந்தான் செந்தில். லேசாகப் பனி மூட்டம். மங்கலாகத் தெரு விளக்குகள். கலகலப்பாகத் தொடங்கிய பறவைக் கூக்குரல்கள். தொலைவில் கம்பீரமாகத் தெரியும் ஈஸ்வரன் கோயில் கோபுரம். அதன் உச்சியில் இருந்த பாதரச விளக்கு பனியில் மழுப்பலாக ஒளிர... செந்தில் கும்பிட்டுக்கொண்டான். இன்றைய பொழுது எல்லோருக்கும் நல்லபடியாக விடிய வேண்டும்.

ச்சிலீர்! ச்சிலீர்! வாசலில் அம்மா தண்ணீர் தெளிக்கும் சத்தம் கேட்டதும் செந்தில் முகம் மலர்ந்தான். துள்ளலுடன் ஓடிச்சென்று வாசலை அடைந்தான்.

புள்ளிகள் வைக்கத் துவங்கியிருந்த செந்திலின் அம்மா பூரணி நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தாள்.

"அட! எழுந்துட்டியா! இன்னிக்கு லீவு தானே செந்தில்... இன்னும் தூங்கலாமே!"

பதில் பேசாமல் செந்தில் சிரித்தான். தினமும் அதிகாலையில் வாசலுக்கு வந்து அம்மா போடும் கோலத்தை லயித்துப்

பத்மா ரவிசங்கர்



அழகன், செந்தில், குமரன்!

பார்ப்பது அவன் வழக்கம் என்பது அம்மாவுக்குத் தெரியும்.

அம்மா கோலம் போடுவதில் எக்ஸ்பர்ட். சிறிய கோலங்கள். பெரிய கோலங்கள். வட்டக் கோலங்கள். சிக்கல் கோலங்கள். அக்கம் பக்கம் உள்ள பல பெண்கள் வந்து அம்மாவிடம் கற்றுக் கொள்வார்கள்.

கோலத்தில் அம்மாவின் கரம் எங்கும் தங்கவில்லை; தயங்கவில்லை. அம்மாவின் கையில் நளினம் இருந்தது. வளைவுகளில் அனாயாசமான வேகம் இருந்தது. செந்தில் வியந்தான்.

"கிரேட்மா!"

"பழக்கம்தாண்டா செந்தில். எதையுமே சிறப்பாச் செய்யணும்னு மனசுல தீர்மானம் இருக்கணும். ஒரு தீவிர ஈடுபாட்டோட செய்தா, எல்லாமே சாத்தியம்!"

அம்மாவின் கனிவான குரலில் வந்த வார்த்தைகள் அவன் மனத்தில் பச்சக்கென்று ஒட்டிக்கொண்டன.

"உன் பாட்டனி டிராயிங்ஸூம் நல்லாத்தான் வரையறே செந்தில்!"

உண்மைதான். பள்ளிப் பாடங்கள் மட்டுமல்ல; எதையுமே ஒருமுறை பார்த்தாலே போதும்; அப்படியே அச்சாக வரையும் திறமை செந்திலிடம் இருந்தது. அம்மாவின்



அழகைத்தான் கொள்ளவில்லை. அம்மாவின் சித்திரம் வரையும் திறமையாவது தன்னிடம் வந்ததே என்று சந்தோஷப்பட்டான்.

கோலம் பூர்த்தியானதும் பூரணி முறுவலுடன் நிமிர்ந்தாள்.

கோலம் பெரிதாக இருந்தது - அம்மாவின் மனசைப் போலவே!

"அம்மா..." என்று தயக்கமாக இழுத்தான்.

"என்னடா?" என்று அருகே வந்தாள்.

"உன் கையைக் கொடும்மா..."

அம்மாவின் கரத்தைப் பற்றிக் கண்களில் ஒத்திக்கொண்டான். பின், அம்மாவின் கையில் முத்தமிட்டான்.

"நல்ல பிள்ளை! இதுக்குத்தானா இவ்வளவு தயக்கம்!"

சிரித்த அம்மாவின் அழகான முகத்தில் தெரிந்த பெருமிதத்தைக் கவனித்தான் அழகற்ற செந்தில். அவன் மனத்திற்கு இதமாக இருந்தது. ஆனால் அப்பாதான்...

அப்பா தியாகராஜனுக்குச் செந்திலைப் பிடிப்பதில்லை. அவர் நல்ல உயரம். செதுக்கினாற் போன்ற முகம். கச்சிதமான மீசை. தெருவில் நடக்கையில் படு கம்பீரமாக இருக்கும். நினைவு தெரிந்த நாளிலிருந்தே அப்பாவின் வெறுப்பைத்தான் செந்தில் அனுபவித்திருக்கிறான். அதற்கு, செந்திலின் உருவம் ஒரு முக்கிய காரணம். பிறகு, செந்தில் பிறந்தபோதுதான், அப்பாவுக்கு வாழ்க்கையில் சில சிக்கல்கள் ஏற்பட்டதாம்! சரிவுகளும் தோன்றியதாம்! ஹ்ூம்... அப்பாவின் (அவ) நம்பிக்கைகள்!

செந்தில் ஹோம் வொர்க் செய்து கொண்டிருந்தான்.

வாசலில் சைக்கிள் மணிச்சத்தம் கேட்டது. "டேய் பாஸ்கர்!" என்று கூக்குரல்கள் கேட்டன.

செந்தில் எட்டிப் பார்த்தான். வாசலில் நான்கைந்து பையன்கள். அனைவரும் பாஸ்கரின் நண்பர்கள். பாஸ்கர், செந்திலின் தம்பிதான்; சிவப்பாக களையாக இருப்பான். அழகான பாஸ்கருக்கு நிறைய நண்பர்கள்.

செந்திலைத் தேடித்தான் யாருமே வருவது இல்லை. செந்திலுக்கு நண்பர்களே இல்லை. யாருக்குமே அவனைப் பிடிப்பது இல்லை. ஏன் கடவுளே? குரூபமாகப் பிறந்தது அவன் குற்றமா?

"வெளி உருவத்திலேயும் நிறத்திலேயும் என்ன இருக்கு... என் செந்தில் மனம் சொக்கத் தங்கம்! அதைப் புரிஞ்சுக்கிற காலம் வரும்! நல்ல நட்பும் கிடைக்கும்" என்று அம்மா அவ்வப்போது சொல்வாள். ஆறுதலாக உணர்வான்.

இன்று ஞாயிறு. அப்பா வீட்டில் இருக்

கும் இம்மாதிரி விடுமுறை நாட்களில் செந்தில் வெளியே கிளம்பி விடுவான். தன்னால் அவர் மூடு அவுட் ஆவதை அவன் விரும்புவதில்லை.

சடுதியில் சாப்பிட்டு விட்டுக் கிளம்பினான். அவன் தோளில் வழக்கமான ஒரு ஜோல்னாப் பை. அந்தப் பைக்குள் சித்திரம் வரையத் தேவையான பொருட்கள். அம்மா ஆசையுடன் கொடுத்துள்ள தின்பண்டப் பொட்டலம்.

வாசலில் செந்திலைப் பார்த்ததும் மிகவும் குஷியாகி குமரன் புறப்படத் தயாரானது.

குமரன், செந்திலின் செல்ல நாய்! சின்னஞ்சிறு குட்டியாகத் தெருவில் திரிந்த போது கண்டெடுத்து வந்து வளர்த்து வருகிறான். தற்போது குமரன் நல்ல உயரமாக இருந்தது. படு புத்திசாலி. குமரனையும் அப்பாவிற்குப் பிடிக்காது. 'சனியன் சனியன்' என்று எப்போதும் திட்டுவார்.

வாலை வேகமாக ஆட்டிக் கொண்டிருந்தது. "போதுண்டா குமரா!" என்று கொஞ்சியவாறு அதன் முதுகைத் தடவிக் கொடுத்தான். பலர் வெறுத்து ஒதுக்கும் இந்த உலகில், தன்னையும் விரும்பும் விசுவாசமுள்ள ஜீவன்!

தனக்கும் அழகுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்பதனால், தன் ப்ரியமான நாய்க்கு அழகன் முருகனைக் குறிக்கும் பெயர் வைத்திருந்தான். 'குமரா! குமரா!' என்று நெஞ்சு நிறையக் கூப்பிட்டு மகிழ்வான்.

குமரனுக்குத்தான் தன்னிடம் எவ்வளவு ப்ரியம்...! எவ்வளவு விசுவாசம்...! வெறுத்து விலகி ஓடாமல் அருகே வந்து என்னமாகக் குழைகிறது...!

வெளியே சுமாராக வெயில். தம்பி பாஸ்கரும் அவன் நண்பர்களும் குச்சிகள் நட்டு டென்னிஸ் பந்தில் கிரிக்கெட் விளையாடுவதை ஏக்கமுடன் சில வினாடிகள் பார்த்தான் செந்தில். பிறகு விறுவிறுவென்று தெருவில் இறங்கி வேகமாக நடந்தான். குமரன் உற்சாகமுடன் அவனைப் பின் தொடர்ந்தது.

செந்தில் வீட்டிலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்திலிருந்தது அந்தச் சிறிய மலைத் தொடர். ஊரின் மேற்குப் புறத்தில் அமைந்திருந்தது. அதைப் பெரிய மலை என்றும் சொல்ல முடியாது. சிறிய குன்று என்றும் கூற முடியாது. நடுவாந்தரமாக இருந்தது.

சுமார் நாலு கிலோமீட்டர் நீளத்துக்குத் தொடர்ச்சியாக எழும்பியிருந்த அதைப் பெரும் குன்றுத்தொடர் என்று சொல்லலாம். மலைக்கு அப்புறமும் சில கி.மீ தூரத்துக்கு விட்டு விட்டு சிறு குன்றுகளும் மண்டியிருந்த காடுமாக இருந்தது. அங்கே ஓர் நீர்ச்சுனை கூட உண்டு.


மலை, மரகதப் போர்வை போர்த்தியிருந்தது. வழி தவறி தாழ்ந்திருந்த மேகத் துணுக்கு ஒன்று மலை உச்சியை நலம் விசாரித்துக் கொண்டிருந்தது. செந்தில் குன்றை நெருங்கியிருந்தான். கம்பீரமாக உயர்ந்திருந்த மலைக் காட்சியில் பரவசமானான். 'வா! வா செந்தில்!' என்று மலை அழைப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. உற்சாகமாக ஏறத் தொடங்கினான்.

மலைக்கு முறையான படிகள் இல்லை. ஆயினும், வழி தெரிந்தவர்கள் எளிமையாக ஏறலாம்.


மலையின் மத்தியப் பகுதிக்கு வந்ததும் செந்தில் சற்று இளைப்பாற விரும்பினான். ஒரு சிறு மரத்தின் மீது சாய்ந்துகொண்டு வந்த வழியைத் திரும்பிப்பார்த்தான்.

பிரதான சாலையில் செல்லும் வாகனங்கள் பொம்மை சைஸில் காட்சி அளித்தன. தெற்குப்புறம் கம்பளம் விரித்ததுபோல் ஏரி தெரிந்தது. வீடுகள் அளவில் சிறியதாகி, ஊர் மொத்தமும் சுருங்கி கண் பார்வைக்குள் அடங்கி விட்டிருந்தது. மேலே உயர, உயர எல்லாம் சிறுத்து அற்பமானவையாகத் தோன்றின. அது போல, மனித மனமும் உயர்ந்தால்!

ஊரின் கிழக்கு எல்லையில் இருந்த தொழிற்சாலையைப் பார்த்தான் செந்தில்.



"நான் பின்னாடி வர்றதை முன்னாடியே சொல்லிடுவேன்."
"எப்படிடா?"
"திரும்பிப் பார்த்துத்தான்!"
— தாரை மா. மகேஷ்பிரியன்



ஓவியப் போட்டி

இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு பூத்துக்குலுங்கும் மரம். உங்கள் ஓவியங்கள் கண்டிப்பாக வண்ணத்திலிருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும். கடைசி தேதி **20.6.2000**

'அழகன் தொழிலகம்' என்று அதற்குப் பெயர். ஊர் மக்கள் பலர் அதில் வேலை செய்கிறார்கள். அப்பாவுக்கும் அங்கேதான் வேலை. ஊரின் பெரும் வளர்ச்சிக்குக் காரணம் அழகன் தொழிலகம்தான்.

ஒரு மணி நேரத்தில் உச்சியை அடைந்து விட்டான் செந்தில். இது வேறு ஒரு உலகம் போல இருந்தது. காற்றில் கம்மென்ற மணம். மிக லேசாகக் குளிர். குத்துச் செடிகள், காட்டுக் கொடிகள், பெயர் தெரியாத பலவித பூச்செடிகள் என உச்சிப் பகுதி ரம்யமாக இருந்தது; அகன்று விரிந்திருந்தது. சமமில்லாத தரை, துருத்தும் பாறைகள்.

இந்த மலைதான் செந்திலின் சொந்த ராஜ்ஜியம். இந்தச் செடி கொடிகள் அவனைப் பரிகசிப்பதில்லை. அவன் குரூப சொரூபத்தைப் பார்த்து எந்த ஜந்துவும் மிரண்டு ஓடுவதில்லை. இங்கே குட்டை மரங்களும் உண்டு. இன்னும் நெட்டைக் கொடிகள், வளைந்த செடிகள், விநோத நிறங்களில் பூக்கள். எல்லாமே இங்கு இயற்கை; இதுதான் அழகு; அற்புதம். 'நானும் இப்படிப்பட்ட ஓர் இயற்கைப் படைப்புத்தானே' என்று நினைத்தான் செந்தில்.

இங்கே அழகிய வண்ணத்துப் பூச்சிகளும் உண்டு. கறுப்பு நிற காகமும் உண்டு. இங்கே எந்த வித்தியாசமும் இல்லை. இங்கே செந்தில் சிரிக்கக் கூச்சப்பட வேண்டாம்! இயல்பாக, சுதந்திரமாக அதோ அந்தப் பறவை போல இருக்கலாம்.

வழக்கமான மரத்தினடியில் அமர்ந்து செந்தில் வரையத் தொடங்கினான்.

சிறிது நேரம் சென்றது. செந்தில் வரைவதை நிறுத்தினான். வானத்தில் கரு மேகங்கள் வந்து சூழ்வதைக் கவனித்தான். அந்தப் பிரதேசம் ஹோவென்றிருந்தது. எங்கும் நிசப்தம். காற்றுகூட வீசாமல் கம்மென்றிருந்தது. மழை வருமா?

திடுமென்று ஏதோ ஓசை மிக மெலிதாகக் கேட்டது. உற்றுக் கவனித்தான். சற்றுத் தொலைவில் செடிகள் மறைவில் இருந்து காலடி ஓசை கேட்டது. எவரோ நடக்கிறார்கள்! மலைக்கு ஆடு மேய்ப்பவர்கள் வருவது உண்டு. இன்று ஒருவரையும் காணோம். ஏதேனும் மிருகம் நடமாடுகிறதா?

மலைக்கு மறுபுறம் உள்ள காட்டுப் பகுதிகளில் கழுதைப்புலி உலவுவதாகச் சொல்வார்கள். இதுவரை செந்தில் பார்த்ததில்லை. இன்று பார்க்க நேரிடுமோ?

சட்டென்று குமரனின் காதுகள் விடைத்துக்கொண்டதை செந்தில் கவனித்தான். ஆக, அவன் கேட்டது பிரமையில்லை! குமரன் எதையோ உற்றுக் கவனிக்கிறது. விலுக் விலுக்கென்று முகத்தை திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தது. சிறிது நேரம் இலக்கில்லாமல் குறுக்கும் நெடுக்கும் வேகவேகமாக அலைந்தது. மூலைகளை முகர்ந்து பார்த்தது.

தற்போது காலடி ஓசை மெல்லத் தேய்ந்து கொண்டிருந்தது. மனிதக் காலடி ஓசைதான் என்று செந்திலுக்கு ஏனோ உறுதியாகத் தோன்றியது. யாராக இருக்கும்? ஒருமுறை குமரன் குரைத்தது, எங்கிருந்தோ கேட்டது! குமரா! நீ எங்கேயடா இருக்கிறாய்? இப்படி என்னைத் தனியே தவிக்க விடலாமா?

அப்போது புஸ்ஸ் என்று எழுந்த சீறல் ஒலியில் செந்திலின் சிந்தனை அறுந்தது. அவனுக்கு அதிர்ச்சியில் சிலிர்த்தது. செந்திலுக்கு எதிரே, அருகே –

ஒரு நல்ல பாம்பு படமெடுத்துக் கொண்டிருந்தது!

(தொடரும்)

அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில் இரண்டாவது பரிசு பெறும் இரண்டாவது கட்டுரை



உழைப்பின் மதிப்பு!

இவ்வுலகில் தோன்றிய அனைத்து ஜீவராசிகளும் உழைக்கின்றன. விலங்குகள், பறவைகள், பூச்சிகள், புழுக்கள் என எல்லா உயிரினங்களும் உழைத்துக் கொண்டேயிருக்கின்றன. ஆறறிவு படைத்த மனிதனில் மட்டுமே சோம்பல் என்ற நஞ்சு காணப்படுகின்றது.

உயர்ந்த குறிக்கோளை உழைப்பால் அடைந்து, மாணிக்கங்களாய் திகழ்ந்தார்கள் நம் முன்னோர்கள். வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் முன்னோர்களின் அயராத உழைப்பை நாம் அறிந்து கொள்ள முடியும்!

உழவர்கள் சேற்றில் கால் வைத்து வியர்வை சிந்தி உழைப்பதால்தான் விதைகள் முளைத்து வானத்தைப் பார்க்கின்றன.

இலைகள், மரப்பட்டைகளை ஆடையாக உடுத்திய மனிதன் விதவிதமான துணிகளை உடுத்துவதற்குக் காரணம் உழைப்பே.

விஞ்ஞானிகளும் அறிஞர்களும் இரவு-பகல் பார்க்காமல் உழைத்ததால்தான் மனித இனம் அறிவியல் உலகில் முன்னேறி பெரும் சாதனைகளைப் படைத்திருக்கிறது. பாலைவனங்கள் சோலைவனங்களாவதும் நகரங்கள் தொழிற்துறையில் முன்னேறுவதும் உழைப்பு இருந்தால் மட்டுமே முடியும்.

இரண்டாம் உலகப் போரில் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானது ஜப்பான். இன்று வல்லரசு நாடுகளில் ஒன்றாகத் திகழ்வதற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் கடின உழைப்பே.

எந்த ஒரு செயலும் உழைப்பின்றி பயன் தராது. சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்து இடையறாது உழைத்தால்தான் சாதனை என்ற கனியைப் பெற முடியும்.

வறுமை மிக்க குடும்பத்தில் பிறந்தும் உயரிய குறிக்கோளை மனத்தில் கொண்டு உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள் ஏராளம். செல்வம் மிக்க குடும்பத்தில் பிறந்து சோம்பியிருந்து சுற்றத்தார் வெறுக்கும் நிலையை அடைந்தவர்களும் உண்டு.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்; இனி உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்ற மகாகவி பாரதியின் வரிகள் உழைப்பின் மேன்மையை அழகாக எடுத்து காட்டுகின்றன.

வள்ளுவர் கூட சோம்பேறிகளை,


'இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'

– என்று இடித்துக் கூறியுள்ளார்.

உழைப்பு ஒருவனுக்கு உயர்வினைத் தரும். நாம் நமக்காக மட்டுமின்றி, நம் வீட்டுக்காக, நாட்டுக்காக பெருமையுடன் உழைத்து இந்தியாவை ஓர் உன்னத நாடாக்க வேண்டும்.

உழைப்பே சத்தியம்! அதுவே நிச்சயம்!

— சு. ஸ்ரீதரன்,
அம்பத்தூர்,
சென்னை.



புதிர் உலகம்

I

சங்கருக்கு திடீரென 100ரூபாய் தேவைப்பட்டது. எனவே தன் நண்பர்கள் ஐந்து பேரைக் கேட்க, அனைவரும் கொடுத்தனர்.

எப்படி தெரியுமா? முதலாமவன் கொடுப்பதைவிட இரண்டாவது நண்பன் ரூ.6 அதிகமாகவும், இரண்டாவது நண்பனை விட ரூ.6 அதிகமாக மூன்றாவது நண்பனும், மூன்றாவது நண்பனை விட ரூ.6 அதிகமாக நான்காவது நண்பனும், நான்காவது நண்பனை விட ரூ.6 அதிகமாக ஐந்தாவது நண்பனும் கொடுத்தார்கள்.

அனைத்தும் சேர்த்து எண்ண ரூ.100 ஆனது. நண்பர்கள் எப்படி கொடுத்திருப்பார்கள்?

II

சிறுவன் ஒருவன் கூடையில் மாம்பழங்களை எடுத்து வந்தான். எதிரே சைக்கிளில் வந்தவன் மோத அருகில் இருந்த சாக்கடையில் பழங்கள் அனைத்தும் விழுந்து வீணாயின.

சைக்கிள் ஓட்டிய சிறுவனைப் பார்த்து "கூடையில் எத்தனை பழங்கள் இருந்தன? அருகில் உள்ள கடையில் வாங்கித் தருகிறேன்'' என்றான் சைக்கிள் காரன்.

சிறுவனோ, கூடையில் இருந்த பழங்களின் எண்ணிக்கை இரண்டாலோ, மூன்றாலே, நான்காலோ வகுத்தால் ஒன்று மிஞ்சும். ஐந்தால் வகுத்தால் ஒன்றும் மீறாது எனப் புதிர் போட்டான்.

சைக்கிள்காரன் நன்றாக யோசித்து வாங்கிக் கொடுத்து விட்டான். நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்!

– க. கண்ணகி,
மிட்டூர்.

III

ஓர் ஊரில் ஒருவனுக்கு நான்கு மகன்கள் உள்ளனர். ஒவ்வொரு மகனுக்கும் ஒரு தங்கை இருக்கிறாள். அப்படியெனில், அவனுக்கு எத்தனை குழந்தைகள் இருக்க முடியும்?

– ஏ. எல். சாதிக்,
காரைக்கால்.

IV

உங்கள் நண்பரை எந்த எண்ணையாவது நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். அவர் நினைத்த எண்ணை மூன்றால் பெருக்கச் சொல்லுங்கள். வந்த விடையை மீண்டும் இன்னொரு மூன்றால் பெருக்கச் சொல்ல வேண்டும். இப்போது பெருக்கி வந்த விடையை கூறச் சொல்லுங்கள். அவர் கூறிய விடையை ஒன்பதால் வகுத்து அவர் நினைத்த எண்ணைச் சொல்லுங்கள், ஆச்சரியப்படுவார்!

– எ.எல். ஹாஜா
பக்ருதீன் பாத்திமா,
காரைக்கால்.

V

புது வருடம் பிறந்ததும் ஒரு வகுப்பு மாணவர்கள் முழுவதும் வாழ்த்துக் கடிதங்கள் பரிமாறிக் கொண்டார்கள். ஒவ்வொருவரும் மற்ற எல்லோருக்கும் வாழ்த்துக் கடிதங்கள் அனுப்பினார்கள். அந்த வகுப்புக்கு மறுநாள் தபால்காரர் 1640 கடிதங்கள் கொண்டு வந்து கொடுத்தார். அந்த வகுப்பில் இருந்த மாணவர்கள் எத்தனை பேர்?

– ஆறுபாதி
புகழேந்தி

VI

பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது. ஒரு வகுப்பில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் விளையாட்டில் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஆனால் எல்லோரும் வெற்றி பெறவில்லை. மகிழ்ச்சி அடைந்த அவ்வகுப்பு ஆசிரியர் அனைவருக்கும் பரிசளிக்க எண்ணினார்.

அனைத்து மாணவர்களுக்கும் அன்பளிப்பாய் கொடுக்க நூறு ரூபாய் எடுத்து வந்தார். எண்ணில் உள்ள மாணவர்கள் கண்ணில் இல்லை.

பரிசளிப்புத் தொகையை எண்ணில் உள்ள மாணவர்களுக்கும் சேர்த்து பங்கிடா திருந்தால் கண்ணில் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் 2½ரூபாய் கிடைத்திருக்கும். அப்படியானால் அவ்வகுப்பில் எண்ணில் உள்ள மாணவர்கள் எத்தனை பேர்? கண்ணில் உள்ள மாணவர்கள் எத்தனை பேர்?

– சிவ. மணவழகி
மயிலாடுதுறை.

VII

இங்குள்ள குறிப்புகளை உதவியாகக் கொண்டு கட்டத்திற் குள் 'நெ' என்ற எழுத்தில் ஆரம்பமாகும் ஐந்து விடைகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

நெ	

குறிப்புகள்:

1) 1804ல் பிரெஞ்சுப் பேரரசனாக இருந்தவன் இந்த மன்னன்.
2) தென் ஆப்பிரிக்காவின் வெள்ளை அரசுக்கு முற்றுப்புள்ளி வைத்த ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்.
3) ஆம்ஸ்டர்டாம் என்பது இந்த நாட்டின் தலைநகர்.
4) பறவை இனங்களிலேயே அதிவேகமாக ஓடும் பறவை இது.
5) தமிழ்நாட்டில் லிக்னைட் நிறுவனம் உள்ள ஊர்.

– ஆறுபாதி புகழேந்தி,
மயிலாடுதுறை.

விடைகள்:

I ரூ.8, ரூ.14, ரூ.20, ரூ.26, ரூ.32.

II 25 பழங்கள்

III மொத்தம் ஐந்து குழந்தைகள். முதலில் நான்கு மகன்கள், ஐந்தாவது மகள். அவள் நால்வருக்கும் தங்கை ஆகிறாள்.

IV நினைத்த எண்–5.
5 x 3 = 15
15 x 3 = 45
45 ÷ 9 = 5
விடை: 5

V விடை: 41

VI எண்ணில் உள்ள மாணவர்கள் 50 பேர்
கண்ணில் உள்ள மாணவர்கள் 40 பேர்
அன்றைய தினம் வராத மாணவர்கள் 10 பேர்

VII
1) நெப்போலியன்
2) நெல்சன் மண்டேலா
3) நெதர்லாந்து
4) நெருப்புக்கோழி
5) நெய்வேலி



பூசணி பொம்மை



தேவையான பொருட்கள் : பூசணிக்காய் அல்லது பறங்கிக்காய் அல்லது தர்பூசணி, கேரட், கத்தி, கரண்டி, அட்டை, ஆணி, மெழுகுவர்த்தி, தீப்பெட்டி.

1. பூசணிக்காயைப் படத்தில் காட்டியபடி காம்பு இருக்கும் பகுதியை வெட்டுங்கள். உள்ளிருக்கும் சதைப் பகுதிகளைக் கரண்டியால் தோண்டி எடுத்து விடுங்கள். (எடுத்த சதைப் பகுதிகளை வீணாக்காமல் சமைக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்!)

1



2



3



4



2. பூசணிக் காயில் இரண்டு முக்கோணங்களை வெட்டி கண்களாக் குங்கள்.

3. மூன்று சதுரங்களைக் கண்களுக்குக் கீழ் வெட்டிப் பற்களாக்குங்கள்.

4. மூக்கிற்கு ஒரு துளை போட்டு கேரட்டை நுழைத்து விடுங்கள்.

5. அட்டையைப் படத்தில் காட்டியபடி இரு துண்டுகளாக வெட்டி இரண்டு பக்கமும் சொருகுங்கள். காது ரெடி.

6. ஆணியைப் பூசணியின் அடியில் குத்துங்கள்.

5



6




7



7. பூசணியின் உட்பகுதியில் தெரியும் ஆணியில் மெழுகுவர்த்தியைக் குத்துங்கள். மெழுகுவர்த்தியை ஏற்றி வெட்டிய மேல் பகுதியை பொம்மையின் மீது மூடி போல் வைத்து விடுங்கள். இதோ கண்கள், பற்கள் வழியே ஒளி வந்தபடி பூசணி பொம்மை தயார்.

இந்தப் பொம்மையைச் செய்து தம்பி, தங்கைகளை சந்தோஷப்படுத்துங்கள்.

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT...

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's College and Career Fund

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT...

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's College and Career Fund

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT...

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT...

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Raj Lakshmi

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Raj Lakshmi

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Raj Lakshmi



பறந்து கொண்டே சாப்பிடும் பறவை!



வானில் சுற்றித் திரியும் V வடிவ வாலைக் கொண்ட அழகிய பறவை தான் மாரிக்குருவி. வானில் பறக்கும் இப்பறவையை V வடிவ வாலின் உதவியால் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ளலாம். லேசான ஒலி எழுப்பிக் கொண்டு எப்பொழுதும் வானிலேயே சஞ்சரிக்கும் - இந்த மாரிக் குருவி.

இறக்கையும் உடலின் மேற்புறம் மற்றும் தலையும் இருண்ட நீல வண்ணமாக இருக்கும். வாயைச் சுற்றிலும் சிவந்த பழுப்பு நிறமும் உடலின் அடிப்புறம் வெள்ளையாகவும் காட்சி தரும்.

நீண்ட நீலநிற வாலில் வரிசையாக வெள்ளை நிறப் புள்ளிகள் காணப்படும். மாரிக்குருவி பறக்கும் போதுதான் இந்தப் புள்ளிகளைக் காண முடியும்.



மாரிக் குருவிகள் ஒவ்வொரு ஆண்டும் ஒரே இடத்தில் கூடுகளை உருவாக்குகின்றன. இந்தக் கூடு காபி கப் வடிவில் இருக்கும். காய்ந்த புல் மற்றும் மண்ணால் ஆனது கூடு. கட்டடங்களின் பக்கச் சுவர்கள், பாலங்களின் அடியில், உயரமான இடங்கள் போன்றவற்றில் கூடுகளை உருவாக்குகின்றன.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பெண்

எஸ். சுஜாதா



மாரிக்குருவி ஐந்து முட்டைகள் வரை இடும். முட்டைகளில் சிவந்த பழுப்பு நிற முடைய புள்ளிகள் காணப்படும். முட்டை யிலிருந்து குஞ்சு வெளிவர பதினாறு நாட்களாகும்.

குஞ்சுகள் வெளி வந்ததும் தாய்க் குருவி மீண்டும் முட்டைகளை இடும். மாரிக் குருவிகள் குளிர்காலம் துவங்கும் முன் குடும்பத்துடன் வேறு இடங்களை நோக்கிப் பறக்கத் துவங்கி விடுகின்றன.

மாரிக்குருவிக்கு குளிர்ந்த சூழ்நிலைகளில் வாழ இயலாது. எனவே இது போன்ற பறவைகள் பருவ நிலைக்கு ஏற்ப பல இடங் களைத் தேடிச் செல்கின்றன. ஆயிரம் மைல் களுக்கு அப்பால் நாடு விட்டு நாடு செல்லும் இப்பறவைகள் வெது வெதுப்பான சூழ் நிலையும் உணவும் கிடைக்குமிடத்தில் தங்கி விடுகின்றன. மீண்டும் பருவ நிலை மாறும்பொழுது பிறந்த இடத்திற்கே திரும்பி விடுகின்றன.

மாரிக்குருவிகள் பெருங் கூட்டமாகவே வசிக்கின்றன. பெரும்பான்மையான நேரத்தை வானில் சுற்றித் திரிவதிலேயே கழிக்கின்றன. சாதாரணமாக இவை தரை யிறங்குவதில்லை. மிகவும் அரிதாகத்தான் இவற்றைத் தரையில் பார்க்கலாம். மின் சாரக் கம்பங்கள், டெலிபோன் கம்பங்கள், கட்டடங்கள் போன்றவற்றில் எப்போ தாவது அமர்வது உண்டு. மாரிக் குருவியால் மற்ற பறவைகளைப் போல் தரையில் நடக்கவோ, தத்திச் செல்லவோ முடி யாது.



எப்பொழுதும் வானில் பறந்து திரியும் மாரிக்குருவி சாப்பிடுவது எப்போது? சாப் பிடுவதும் பறந்து கொண்டே தான்! காற்றில் பறந்து திரியும் பூச்சிகளைப் பாய்ந்து பிடித்துத் தின்னும். சில நேரங்களில் நீர்ப்பரப்பை ஒட்டிப் பறந்து நீரில் மிதக்கும் பூச்சிகளைச் சாப்பிடுவதும் உண்டு. மரங்கள் மற்றும் புதர்ச் செடிகளில் உள்ள பூச்சிகளை யும் கூட விட்டு வைப்பதில்லை.

மாரிக்குருவிகளுக்குச் சிறிய அலகு இருக்கும். குஞ்சுகள் பசியால் வாயைத் திறக்கும்போது வாய் அகன்று காணப்படும். குஞ்சுகளின் வாய் மஞ்சள் நிறத்தில் இருக்கும். குஞ்சுகள் வாயைத் திறந்து கத்தும்போது தாய் அவற்றின் பசியை அறிந்து உணவூட்டும்.

குஞ்சுகள் பிறந்த பத்து நாட்களில் இறகுகள் முளைக்கும். ஆனால் முதிர்ந்த பறவைகளைப் போன்ற பிர காசமான நிறம் காணப்படாது. வாலும் குட்டையாகவே இருக்கும். வளர்ந்த பின்தான் இவை அழ காகக் காட்சி தருகின்றன.

ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களில் மாரிக் குருவிகள் வசிக்கின்றன. பரு வங்கள் மாறும் போது ஆப் பிரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்கும் ஐரோப்பாவிலிருந்து ஆசியாவிற்கும் என நீண்ட பயணத்தை மேற் கொள்கின்றன.

கோகுலம் க்விஸ்

கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்து கேள்விகளுக்கும் விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். விடைகளை எழுதி அனுப்புவதோடு முகவரிக் கூப்பனை ஒட்டி உங்கள் சரியான முகவரியையும் மறக்காமல் எழுதுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி **30.6.2000**



1. நீர் அருந்தாத விலங்கு ______

2. உலகிலேயே பால் உற்பத்திக்குப் பெயர் பெற்ற நாடு ______

3. நோபல் பரிசுகளை அதிகம் பெற்ற குடும்பம் ______

4. உலகிலேயே யானைகள் அதிகமுள்ள நாடு ______

5. கொசுக்களே இல்லாத நாடு ______

6. ஆந்திராவின் தலைநகர் ______

7. எலும்பு மற்றும் பல் வளர்ச்சிக்கு இன்றியமையாத நுண்ணூட்டச் சத்து ______

8. ஆக்டோபஸ் ______ இனத்தைச் சேர்ந்தது.

9. கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை எடுத்தவர் ______

10. சோடா பானத்தில் இருக்கும் வாயு______.

ஆசிரியர்,
கோகுலம்,
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 97



அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில் இரண்டாவது பரிசு பெறும் இரண்டாவது கதை

ஏன் சிரித்தார்கள்?

பள்ளியில் ஆண்டு விழா.

மாணவ, மாணவியர் தங்கள் குடும்பத்துடன் வந்திருந்தனர்.

செம்பருத்தி வண்ண கவுன் அணிந்து முல்லையென சிரித்தபடி தன் அம்மாவின் கைபிடித்து நடந்து வந்தாள் மாலதி. நடையில் துள்ளல் இருந்தது. பக்கத்தில் நடந்து வரும் அண்ணன் ஆனந்தின் பார்வையில் கொஞ்சம் அந்நியத் தனமிருந்தது.

அவன் படிக்கும் பள்ளி போல் இது இல்லை. கொஞ்சம் பெரியது.

எல்.கே.ஜி. பிள்ளைகள் உயரம் வளர்ந்திருந்த குரோட்டன்ஸ் செடிகள், பலவித மாணவர்கள் போல வெவ்வேறு நிற மலர்கள் என எங்கும் குளிர்ச்சியாய்க் காணப்பட்டது.

"மா.... மா... மாலதி உன் கிளாஸ் எது?" என்றான் ஆனந்த்.

"போண்ணா.... நீயே கண்டுபிடி" என்றவள் மீண்டும், "அம்மா, அதோ பார்! அதான் உமா. என் தோழி" என்று சொல்லிவிட்டு மான் போல ஓடிப் போனாள்.

"மா... மா... மாலதி" என்று கூப்பிட்டு விட்டு பேசாமலிருந்தான் ஆனந்த்.

மாலதி ஐந்தாம் வகுப்பு படிப்பவள். ஆனந்த் ஏழாம் வகுப்பு. மாலதி ஓடும் நதியைப் போல மடமடவென்று பேசுவாள். நுரைக்கும் நுரை போல் உதட்டோரம் எப்போதும் சிரிப்பு.

ஆனந்த் இவளுக்கு நேரெதிர். மனம் நாலு வார்த்தை யோசித்தால் உதடு திக்கித் திக்கி இரண்டு வார்த்தை பேசும்.

மாலதியைக் கூட மா... மா... மாலதி என்றுதான் கூப்பிடுவான். மாலதி புரிந்து கொள்ளாமல் கோபம் கொள்வான். ஆனால் யாரும் ஆனந்தைக் கேலி செய்தால் பொறுத்துக் கொள்ள மாட்டாள்.

"ஏம்மா? அண்ணன் இப்படி பேசுகிறான்" என்று அடிக்கடி கேட்டுத் தன் அங்கலாய்ப்பை வெளியிடுவாள். தனக்கு இப்படியொரு



ஜூலியட் ராஜ்

திக்குவாய் அண்ணன் இருப்பதை யாருக்கும் தெரியாமல் பாதுகாத்தாள்.

"அண்ணா! என் ஃபிரண்ட்ஸ் வரும் போது நீ பேசாதேண்ணா... யாராவது கேலி பண்ணுவாங்க" என்பாள் மாலதி.

முகம் சோர்ந்து போவான் ஆனந்த். "அப்படி சொல்லாதே மாலதி, அண்ணன் பேசட்டும். இதுல மறைக்கறதுக்கு ஒண்ணுமில்லை. நிறைய பேர் இதுமாதிரி இருக்காங்க" என்பார் மாலதியின் அம்மா. ஆனால் எளிதில் மாலதி சமாதானம் ஆக மாட்டாள்.

"எ... எ:... எங்கம்மா போ... போ... போறா மா... மா... மாலதி?"

"வருவா ஆனந்த் வா, நாம் போய் நாற்காலியில் உட்காருவோம்" என்று அம்மா நாற்காலி தேடி உட்கார்ந்தார். மாலதியும் ஓடிவந்து சேர்ந்து கொண்டாள்.

கொஞ்சம் கொஞ்சமாய் கூட்டம் சேர்ந்து கொண்டிருந்தது. மாலதியின் பக்கத்தில் அவள் தோழி உமாவும் அவள் தங்கை புவனாவும் உட்கார்ந்து கொண்டார்கள்.

"அம்மா, இவ உமா. என் நெருங்கிய தோழி" என்றாள் மாலதி.

"உமா, உங்க அம்மா வரலையா?"

"லேட்டா வருவாங்கடி. அப்பா இன்னும் ஆபிஸிலிருந்து வரலை" என்றாள் உமா.

"மா... மா... மாலதி, உங்க மி... மி... மிஸ், அதோ பாரேன்!" என்றான் ஆனந்த்.

"ஆமா.. நீ எதுவும் சொல்லாதண்ணா" என்றாள் கோபத்துடன், உமாவும்





என்ன குடை?

இரும்புக் கம்பி துணியும் இன்றி
இருப்ப தென்ன குடையாம்?
இடியும் மழையும் முடிந்த பின்பு
இயற்கை பிடிக்கும் குடையாம்?

விரும்பும் வண்ணம் மனிதர் என்றும்
விரிக்க வொண்ணாக் குடையாம்!
விரிந்த பின்பு சுருக்க ஒரு
விசையும் இல்லாக் குடையாம்!

நிரம்பச் சத்துப் பொருளைத் தன்னுள்
நிறைத்து வைத்த குடையாம்!
நிலத்துள் இருந்து முளைத்து மண்ணில்
நிமிர்ந்து நிற்கும் குடையாம்!

கறந்த பாலின் நிறமும் சின்னக்
காம்பும் கொண்ட குடையாம்!
கரிச மைத்துப் பலரும் உண்ணும்
'காளான்'- என்னும் குடையாம்!

— தளவை இளங்குமரன்

புவனாவும் தன் அண்ணன் திக்கித் திக்கி பேசுவதை, பார்ப்பதைக் கவனித்த மாலதி.

ஆனால் ஆனந்த் காதில் வாங்கியதாய் தெரியவில்லை.

சட்டென்று உமாவும் புவனாவும் அருகில் குனிந்து ஏதோ கிசுகிசுத்தனர்.

தன் அண்ணனைப் பற்றித்தான் ஏதோ பேசுகிறார்கள் என்று மாலதிக்குப் புரிந்தது.

இந்த அண்ணனுக்கு வேறு வேலையே கிடையாது. யார் இருந்தாலும் பேசியே ஆக வேண்டுமா? நாளை உமா, ஆனந்த் பேசுவது போலவே கிளாஸில் பேசிக் கிண்டல் செய்வாள் என எரிச்சல் அடைந்தாள் மாலதி.

“ல.... ல... லைட் போடறாங்க” என்றான் மீண்டும்.

அம்மா உட்பட யாரும் பேசாமல் வேடிக்கை பார்ப்பதில் நேரம் கழிந்தது. கொஞ்சம், கொஞ்சமாய்க் கூட்டம் சேர்ந்து கொண்டேயிருந்தது.

“ப....ப... பலூன் பறக்க வி... வி... விடுவார்களா?”

“ஆமாம்! பேசாமல் பாரு அண்ணா! நிகழ்ச்சி ஆரம்பிக்கப் போகுது” என்றாள் மாலதி கோபத்துடன்.

ஒரு நிமிடம் உமாவும் புவனாவும் பார்த்துக் கொண்டார்கள். உதட்டில் சின்னதாய் ஒட்டிக் கொண்ட சிரிப்பு, கேலியான சிரிப்பா? என்று மாலதி யோசித்தாள்.

மீண்டும் ஆனந்தைப் பார்த்து ஏதோ பேசினார்கள். மாலதிக்குக் கோபம் பற்றிக் கொண்டது. “என்ன உமா?” என்றாள் அவள் பக்கம் திரும்பி.

திடுக்கிட்ட உமா, “ஒ... ஒ... ஒண்ணு மில்லையே” என்று சமாளிக்க இவள் தன் அண்ணனைப் போல் பேசிப் பழித்துக் காட்டுகிறாள் என்று நினைத்தாள் மாலதி.

சட்டென்று அவளை நறுக்கென்று கிள்ளினாள் மாலதி.

“ஏய்... ஏய்... மாலதி, ஏன் கிள்ளறே?” என்று அவள் அம்மா தடுக்க உமா அழ ஆரம்பித்தாள்.

“அம்மா, இவங்க ஆனந்த் திக்கிப் பேசறதைப் பார்த்துக் கிண்டல் செய்து சிரிக்கிறாங்க. அண்ணன் மாதிரியே பேசறா, இவ” என்று நிறுத்தினாள் மாலதி.

“இல்லை ஆன்ட்டி. நாங்க அது மாதிரி பேசலை” என்றாள் புவனா.

“பொய் சொல்றாம்மா....” என்றாள் மாலதி.

“இல்லை ஆன்ட்டி. எங்க அண்ணனுக்குப் பேச்சே வராது. ஊமை. பாவம் அவன். அதான் இந்த மாதிரி திக்கித் திக்கிப் பேசினாலே போதும். நம்ம அண்ணனாலே, அது கூட முடியலையேன்னு சொன்னோம்” என்றாள் புவனா வருத்தத்துடன்.

அதிர்ந்து போனார்கள் மாலதியும் அவள் அம்மாவும்.

“மன்னிச்சுக்க உமா! தவறா நினைச்சிட்டேன்” என்றாள் மாலதி உண்மையான வருத்தத்துடன்.

உமாவும் தங்கையும் சமாதானமானார்கள்.

இசையோடு நிகழ்ச்சி ஆரம்பமானது.

கழுகு வரையுங்கள்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எண்ணும் எழுத்தும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் கழுகு கிடைத்துவிடும்.

இறக்கை: R13→Q14→P12→P11→Q10→O6


உடல் மற்றும் கால்கள்: R16→Q17→P19→P22→O19→O22→N20→O19→P19

வால்: M20→M25

L20→K25

K20→I24

N20→O24→M25→K25→I24→I20→L18



நன்றி: லிட்டில் ஆர்க்

முதல் பரிசு

எம்.டி கார்த்திகேயன்.


ஒன்பதாம் வகுப்பு, மதுரை



இரண்டாம் பரிசு

எஸ். நிவேதா,


ஐந்தாம் வகுப்பு, பாண்டிச்சேரி






ஏப்ரல் இதழில் 'பழங்கள்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.

ஓவியப்போட்டி முடிவுகள்




ஆறுதல் பரிசு
சி.கே. திவ்யா ஜனனி,
ஒன்பதாம் வகுப்பு,
கோவை




ஆறுதல் பரிசு
ஆர். தியாகராஜன்,
கோட்டையூர்



மூன்றாம் பரிசு
எஸ். ராம்குமார்,
நான்காம் வகுப்பு,
விளந்தை,
பெரம்பலூர்
மாவட்டம்





கார்களின்

நெதர்லாந்து நாட்டில்தான் முதலாவதாக 1599ம் ஆண்டு மனிதர்களை சுமந்து தானே செல்லும் வண்டி அறிமுகமானது. இந்த வண்டி நான்கு சக்கரங்களுடன் சமமான சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். அதில் பாய் மர படகுகள் போல் துணிகள் கட்டப்பட்டிருக்கும். காற்று வீசும் திசையில் வண்டி நகரும்.


தற்போது வாகனங்கள் செல்லும் நவீன சாலையை முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் ஜான் மாக் ஆடாம் என்ற ரோம் நாட்டவர். இதை 1820ல் அறிமுகப்படுத்தினார்.

ஆட்டோமொபைல் கார்களில் முதன்முதலாக இடம் பெற்றது நீராவி எஞ்சின்கள்தான். நிக்கோலஸ் காக்நட் எனும் பிரெஞ்சு எஞ்சினியர்தான் 1769ம் ஆண்டு நீராவியில் இயங்கும் வாகனத்தை வடிவமைத்தார். பின்புறம் இரு சக்கரங்கள் முன்புறம் ஒரு சக்கரம். முன் சக்கரத்தில்

வளர்ச்சி!

ஒரு பெரிய 'பாய்லர்' வைத்து நீராவியை உற்பத்தி செய்து 'ஸ்டீம்' எஞ்சின் இயங்கியது. இது மணிக்கு 5 கிலோமீட்டர் சென்றது. ஆனால் கட்டுபடுத்துவது சிரமமாக இருந்தபடியால் சுவற்றில் மோதி உடைந்து போனது.

புதிய வடிவமைப்பில் ரோட்டில் ஓடும்படியான நீராவி காரை அறிமுகப்படுத்தியவர் நீராவி ரயில் வண்டிகளை அறிமுகப்படுத்திய ரிச்சர்டு திரிவேதிக். இவர் 1801ம் ஆண்டில் உருவாக்கிய நிராவி கார்தான் முதன் முதலாக 8 பயணிகளை ஏற்றிச் சென்ற நீராவி கார். இதற்கு 'கேப்டன் டிக்ஸ் பப்பர்' என்று பெயரிட்டிருந்தார் திரிவேக். முதன்முதலாக மலை மீது ஏறிய காரும் இதுதான். (திரிவேதிக் வீடு மலையில் இருந்தது) லண்டனில் சென்ற இந்த முதல் பயணிகள் நீராவி காரின் வேகம் மணிக்கு 19 கி.மீ.





நெருப்பின் மடியில் உட்கார்ந்து வண்டியில் போவதை யார் விரும்புவார்கள். அதனால் நீராவி கார்கள் வெறுக்கப்பட்டன. அதன் விளைவாக புதிய எஞ்சின்கள் வடிவமைக்க முயற்சிக்கப்பட்டது. விளைவு முதன்முதலாக வாயுவின் மூலம் இயங்கும் உள் எரி எஞ்சின் உருவானது.

இதை உருவாக்கியவர் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஜெ.ஜெ. லினோயர். 1862ம் ஆண்டு வெளி வந்த இந்த மோட்டார் கார் இரண்டு மணி நேரத்தில் 9 கி.மீ சென்றது. பாரிஸில் இது நடந்தது.

1875ம் ஆண்டு ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த செய்க்பிரைட் மார்க்கஸ் எனும் எஞ்சினியர், கொஞ்சம் புதிய மேம்பட்ட தரத்துடன் பெட்ஜால் காரைத் தயாரித்தார். லினோயர் மற்றும் மார்க்ஸ் வடிவமைத்த கார்களை மேலும் புதுப்பித்து தற்போது சாலைகளில் ஓடும் கார்களுக்கு முன்னோடி கார்களை தயாரித்தவர்கள் கார்ல் பென்ஸ் மற்றும் கோட்லிக் டைம்லர். 1885ம் ஆண்டு கார்ல் பென்ஸ் உருவாக்கிய 'எஞ்சின்' குதிரையில்லாத குதிரை வண்டி போன்று டைம்லர் தயாரித்த வண்டியில் பொருத்தப் பட்டு 1896ம் ஆண்டு சாலைகளில் ஓடத் துவங்கியது.

ஆதாரம்: தி சூப்பர் புக் கார்

— கோ.வீ. இராஜேந்திரன்


19 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி   படம்: லலிதா




இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?
விவசாயம் செய்கிறோம். எங்கள் மன்னரிடம் போகலாம்!


நாங்கள் பட்ட கஷ்டம் கொஞ்சம் அல்ல. உங்களைப் பார்த்ததில் நிம்மதி.
மன்னர் மிகவும் நல்லவர்.


வணக்கம் அரசே! தங்களுக்கு என் அன்புப்பரிசு!
நன்றி சிந்துபாத். நீங்கள் அரண்மனையிலேயே தங்கலாம்.


சிந்துபாத் மன்னரின் நெருங்கிய நண்பனானான். ஒருநாள் –
சிந்துபாத், பாக்தாத் நகர கலீபாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.
அவர் மிகவும் நல்ல மனம் படைத்தவர்.
கலீபாவிடம் இந்தப் பரிசையும் முத்திரையிடப்பட்ட கடிதத்தையும் கொடுத்து விடுங்கள்.
அப்படியே செய்கிறேன்.
நாளை பாக்தாத் வியாபாரிகள் வருகிறார்கள். அவர்களுடன் நீங்கள் ஊருக்குச் செல்லலாம்!
நன்றி அரசே!


சிந்துபாத்தும் வியாபாரிகளும் பாக்தாத் வந்து சேர்ந்தனர்.
சிந்துபாத் கலீபாவைச் சந்தித்தான்.
சிந்துபாத் எனக்குக் கிடைக்காத பாக்கியம் உனக்குக் கிடைத்ததில் மகிழ்ச்சி. இந்தப் பொற்காசுகளைப் பெற்றுக் கொள்.
சிந்துபாத் மிகப் பெரிய பணக்காரனாகி சந்தோஷமாக வாழ்ந்தான்.

A GIFT FOR DAD

— Fathers' day special

CHARIOT DAY

- Short Story

FREE LABELS

SAVING INDIA'S RHINOS

-In the wild

THE PORCELAIN VASE

MEET : BALU THE BULLY!



GOKULAM

The monthly magazine for children

JUNE 2000 — Rs.6/-

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 97

எங்கள் ஊருக்கு வாருங்கள்!



• புனிதசெல்வ மாதா ஆலயம்

கப்பல், விமானம் வடிவில் ஒரு கோயில்!

நெய்தல் கிராமமாம் உவரி என்னும் சிற்றூரே எங்கள் கிராமம். முற்காலத்தில் ஒபீர் என்று அழைக்கப்பட்ட துறைமுகப் பட்டினமே இன்று உவரி என்று அழைக்கப்படுகிறது. கண்ணுக்குக் குளிர்ச்சி தரக்கூடிய கடற்கரை கிராமம் உவரி.

ஜெருசேலமில் கோவில் கட்டுவதற்காகத் தேக்கு மரங்கள் இங்கு இருந்துதான் கப்பலில் சென்றதாக வரலாறு கூறுகிறது.

எம் ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஊரினுள் நுழையும் பொழுது தென்னஞ்சோலைகளும் பனை மரங்களும் உங்களை வரவேற்கும். புனித அந்தோணியர் திருத்தலம் இங்குள்ளது. அந்தோணியர் அருளாலும் கடற்காற்றினாலும் வேப்ப மரங்களிலிருந்து வரும் காற்றினாலும் பல நோயாளிகள் இங்கு வந்து குணம் பெற்றுச் செல்கின்றனர்.

உவரி ஓர் சுற்றுலாத் தலமும் கூட. பல ஊர் மக்கள் எங்கள் ஊருக்கு வந்து செல்லும் சிறப்புடையது. இச் சிறப்பிற்குக் காரணம் புனித செல்வமாதா ஆலயம் ஆகும். இக் கோயில் கடற்கரையில் அமைந்துள்ளது. கீழே கப்பல் வடிவத்திலும் மேலே ஆகாய விமான வடிவத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. கப்பலின் மீது ஆகாய விமானம் இறங்குவது போல் காணப்படும்.

வாருங்கள் நண்பர்களே! விண்ணை முட்டும் கோபுரங்களும் நோய்தீர்க்கும் ஆலயமும் தென்றல் வீசும் கடற்காற்றும் அனுபவிக்கலாம். காணக் கிடைக்காத வியப்பு தரும் காட்சிகளைக் காண வாரீர்.

– இ. பிராங்கோ, உவரி,
நெல்லை மாவட்டம்.

எங்கள் ஊர் கோவை மாவட்டத்தில் உள்ள திருப்பூர். எங்கள் ஊரைப் பற்றி தெரியாதவர்கள் தமிழகத்தில் குறைவுதான். ஆயினும் அதன் பெருமைகளை எடுத்துரைப்பதை என் கடமையாகக் கருதுகிறேன். எங்கள் ஊர் வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்று. இங்கிருந்து தமிழகத்தில் எங்கு செல்ல வேண்டுமென்றாலும் பேருந்து, ரயில் போக்குவரத்து வசதிகள் உண்டு.

அதே போல் கல்லூரிகளும் பள்ளிகளும் மருத்துவமனைகளும் நிறையவே உள்ளன.

திருப்பூரில் 10 – 15 ஆண்டுகளுக்கு முன் பாய்ந்து ஊரைச் செழிப்பாக்கிய 'நொய்யல்' நதி இன்றும் உள்ளது. ஆனால் சாயப்பட்டறைகளில் இருந்து வெளிவரும் பல வண்ண சாயங்கள் அதில் கலந்ததால் அசுத்தமடைந்து விட்டது. ஆயினும் அதைச் சுத்திகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

எங்கள் ஊரை 'உள்ளாடை நகரம்' என்றும் கூறுவார்கள். இங்கு உற்பத்தி செய்யப்படும் உள்ளாடைகளுக்கு உலக அளவில் நல்ல பெயர் உண்டு. அதனால் பல நாடுகளுக்கும் உள்ளாடைகளை ஏற்றுமதி செய்கிறது இந் நகரம். இந்தியாவில் உள்ளாடைகளை ஏற்றுமதி செய்யும்



• திருவாரூர் தேர்

நகரங்களில் எங்கள் ஊர் முக்கியமானது. இதனால் அரசுக்கு அன்னியச் செலாவணி ஈட்டிக் கொடுத்து இந்தியப் பொருளாதார முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிக்கிறது. இந்தியாவில் பல ஊர்களில் இருந்து பலதரப்பட்ட மக்கள் எங்கள் ஊருக்கு வந்தவண்ணம் உள்ளனர். அவர்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒற்றுமையாக பணியாற்றி தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றனர். ஆதலால், எங்கள் ஊரில் மக்கள் தொகை நெரிசலும் போக்குவரத்து நெரிசலும் எப்பொழுதும் காணப்படும்.

சரித்திரத்திலும் எங்கள் ஊர் சாதனை படைத்துள்ளது. சுதந்திரப் போராட்டத் தியாகி, ஒப்பற்ற வீரன், கொடிகாத்த குமரன் பிறந்த ஊர் எங்கள் ஊர். அவர் நினைவாக ரயில் நிலையம் அருகில் ஓர் நினைவாலயம் நிறுவப்பட்டுள்ளது. எங்கள் ஊருக்கு வந்தால் மறக்காமல் பாருங்கள்.

• திருப்பூர் குமரன்



தொழில் அதிகம் உள்ளதால் அதிகமாக பணப்புழக்கம் உள்ள ஊர் எங்கள் ஊர். இங்கே பெருமாள், ஈஸ்வரன் கோவில் மற்றும் எங்கள் ஊரைச் சுற்றிப் பல புண்ணிய தலங்கள் ஆன கொடுமுடி, மாசாணி அம்மன் கோவில், பண்ணாரி அம்மன் கோவில், அய்யன் கோவில், கள்ளிக்காடு போன்ற இடங்களும் உள்ளன.

– பி. சதீஷ்குமார், திருப்பூர்.

எங்கள் ஊரை யாரும் திருவாரூர் என்றே கூறுவதில்லை. தேரோடும் திருவாரூர் என்றே கூறுவர். திருவாரூர் என்றாலே அனைவருக்கும் நினைவில் வருவது நீதிக்குப் புகழ்பெற்ற மன்னன் மனுநீதிச் சோழனும் தேரோட்டமும் ஆகும். எங்கள் ஊரின் பெருமைகள் அளவிற்கடங்கா. இது ஒரு சிறிய நகரமும் மாவட்டத் தலைநகரமும் ஆகும்.

மும்மூர்த்திகளாகிய தியாகராஜசுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோரும் தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரம், முதல்வர் கருணாநிதி முதலிய சான்றோர்களும் பிறந்து வளர்ந்த புண்ணிய பூமி இத் திருவாரூரே ஆகும். ஆதலால், 'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்னும் வள்ளுவர் வாக்குப்படி இங்கு பிறப்பவர்கள் பெரும் புகழுடன் திகழ்கிறார்கள்.

கன்றை இழந்து தவிக்கும் தாய்ப் பசுவின் துயரத்தைத் தாமும் அடைய வேண்டி தம் மகனை தேர்க்காலில் இட்டுக் கொன்று நீதியுரைத்த மன்னன் மனுநீதிச் சோழன் ஆண்டதும் இத் திருவாரூரே ஆகும். யாராவது மெதுவாக நடந்து வந்தால் அவரைப் பார்த்து 'ஏன் இப்படித் திருவாரூர் தேர் போல ஆடி அசைந்து வருகிறாய்?' என்று கிண்டல் செய்வோம். அவ்வளவு பெரிய தேர் அது. இங்கு பழங்காலக் கல் தேர் ஒன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

நகரின் நடுவே ஓடம்போக்கி ஆறு ஓடுகிறது. இங்குள்ள தியாகராஜர் கோவிலைக் காண வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

தற்போது இங்குள்ள புகழ் பெற்ற கமலாலய குளத்தில் மாநில அரசால் 'படகு இல்லம்' அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வோராண்டும் நடைபெறும் தேரோட்ட நிகழ்ச்சியையும் தெப்பத் திருவிழாவையும் காண வெளியூர் மக்களெல்லாம் வருவார்கள். தேரோட்ட நிகழ்வின் போது மக்கள், "ஆரூரா, தியாகேசா" என்று கூறிக் கொண்டே தேர் வடத்தைப் பிடித்து இழுப்பர்.



• சாயப் பட்டறை


எங்கள் ஊரில் ஒவ்வோராண்டும் பொருட் கண்காட்சியும் இயற்கைக் கண்காட்சியும் 'மே' மாதம் தவறாது நடைபெறும். சிறப்புமிகு திருவாரூருக்கு நீங்களும் ஒருமுறை வாருங்களேன்!

– க. கனிமொழி, திருவாரூர்.

முருகனுக்கு இன்னொரு பெயர் கந்தன். அந்த முருகனே குடியிருக்கும் கோவில் கந்தங்குடி ஆகும். கோவில் கந்தன் குடியே எங்கள் ஊரின் பெயர். இது கிராமம்தான். இருந்தாலும் இங்குள்ள மக்களின் மனசு நகரம் போல விசாலமானது. ஊரின் நடுவில் ஒரு குளம். குளத்தைச் சுற்றி எழில்மிகு கோயில். கோயிலைச் சுற்றி குடிசைகள். இங்கு இரண்டே இரண்டு கடைகள்தான் உள்ளன. ஊரைச் சுற்றி கண்ணைப் பறிக்கிற பசுமையான வயல்கள் காட்சியளிக்கின்றன. எங்கள் ஊரில் விவசாயமே முக்கியத் தொழிலாகும். செப்டெம்பர், அக்டோபர் மாதங்களில் இயற்கையின் முழுமையான அழகை ரசிக்கலாம். எங்கள் கோயில் திருவிழாவின் போது வாயிலில் நிற்கக் கூட முடியாது. அவ்வளவு கூட்டம். அதிகாலையில் சூரியன் உதிக்கும் நேரத்தில் உழவர்கள் தோளில் கலப்பையைத் தூக்கிக் கொண்டு போகும் காட்சியைக் கண்டு ரசிக்கலாம். எங்கள் ஊருக்கு வருவதற்கு போக்குவரத்து வசதிகள் உண்டு. நகரத்தில் சுற்றுச்சூழல் சீர்கேடோடு வாழ்கின்றவர்கள் விடுமுறையில் சில நாட்கள் எங்கள் ஊரில் தங்கி இயற்கையை அனுபவித்து ரசித்தால் என்னவாம்!

– க. இலக்கியரசு, காரைக்கால்.

• திருவாரூர் கோயில்



● க. வாசுதேவன், திருவண்ணாமலை.

? குழந்தைகளுக்கு சாதாரணமாக வருகின்ற நோய்கள் எவையெவை?

! இந்தியாவைப் பொறுத்தவரை சத்துக் குறைவு நோய்கள்தான் குழந்தைகளுக்கு அதிகம். புரதச்சத்துக் குறைவு, வைட்டமின் குறைவு, கால்சியம் மற்றும் இரும்புச் சத்துக் குறைவு நோய்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். அடுத்தது, தொற்றுநோய்கள்: ஜலதோஷம், இளம்காசம், நிமோனியா, மூளைக்காய்ச்சல், அம்மை நோய்கள், மலேரியா, டைபாய்டு, வாந்தி - வயிற்றுப் போக்கு, சிறுநீர்ப்பாதை அழற்சி, தொண்டைச்சதை அழற்சி, நடுச்செவி அழற்சி, குடல்புழுத் தொல்லை, சொறி சிரங்கு, காளான்படை ஆகியவை குறிப்பிடத் தக்கவை. ஆஸ்துமா, காய்ச்சல் வலிப்பு முதலியவையும் குழந்தைகளுக்கு வரக் கூடியவையே. சிலருக்குப் பிறவியிலேயே இதயம், மூளை, கை கால்கள் ஆகியவற்றில் வளர்ச்சிக் குறைபாடுகள் தோன்றலாம்.



● டெ. ஜோஷ்வின், ஐரேனிபுரம்.

? 'Expiry Date' முடிந்த மருந்து, மாத்திரைகளைப் பயன்படுத்தக் கூடாதா? ஏன்?

! ஒரு மருந்துக்கு நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை முடிந்த பின்பு, அதைப் பயன்படுத்தக் கூடாது. காரணம், அந்தக் காலவரையறைக்குப் பிறகு மருந்தின் வீரியம் குறைந்து விடும்; அந்த மருந்தால் நமக்குக் கிடைக்க வேண்டிய முழுப் பலனும் கிடைக்காது; சமயங்களில் வாந்தி, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி போன்ற தொல்லைகள் ஏற்படலாம்.

● ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

? எனக்குச் சில நேரங்களில் உள்ளிப் பாகப் பொருள்களைப் பார்த்தால் தலைசுற்றுகிறது. இது ஏன்?

! உன் கண்ணில் 'தூரப் பார்வைக் கோளாறு' இருக்க வாய்ப்புள்ளது. உடனடியாக அருகில் உள்ள கண் மருத்துவரை ஆலோசித்து சிகிச்சையை மேற்கொள். தலைசுற்றல் குணமாகும்.

டாக்டர் கு.கணேசன்




● காழி. ஆர். சீதாராமன், தென்பாதி.

? சிலர் உணவு சாப்பிட்ட பிறகும், மாத்திரை சாப்பிட்ட பிறகும் நெஞ்சு எரிகிறது என்று கூறுகிறார்களே... இது ஏன்? இதைத் தடுக்க வழி உண்டா, டாக்டர்?

! இரைப்பை மற்றும் முன்சிறுகுடலிலும் உணவுக் குழாயின் கீழ்ப் பகுதியிலும் புண் அல்லது பிளவு இருந்தால் உணவு சாப்பிட்டதும் நெஞ்சில் எரிச்சல் தோன்றும். இரைப்பையில் அளவுக்கு அதிகமான அமிலச் சுரப்பு இருந்தாலும் இதே நிலைமை ஏற்படும். மேற்சொன்ன பகுதிகளில் புற்றுநோய் இருந்தால் கூட நெஞ்செரிச்சல் தோன்றும். இதனைத் தவிர்க்க கீழ்க்காணும் விதிமுறைகள் உதவும்:

தூங்கினால்

1. அளவான உணவை நேரத்தோடு சாப்பிடும் பழக்கம் தேவை. 2. உணவில் புளி, காரம், மசாலா போன்றவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும். 3. எண்ணெய்யில் பொரிக்கப்பட்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும். 4. கொழுப்புப் பதார்த்தங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும். 5. காய்கறி, பழங்களை அதிகமாக உண்ண வேண்டும். 6. தேவையில்லாமல் கவலைப்படுவது, மன அழுத்தத்துடன் காணப்படுவது, கோபப்படுவது போன்ற மனநிலைகளைத் தவிர்க்க வேண்டியதும் அவசியம்.



● பெ. ராமசாமி, கோட்டைப்பட்டி.

? முகத்தில் எண்ணெய் போல பிசுபிசுப்பாக உள்ளது.

இதற்கு என்ன காரணம்? எப்படி நீக்குவது?

! முகத்தில் உள்ள எண்ணெய்ச் சுரப்பிகளின் அதீத செயல்பாடு காரணமாக எண்ணெய் போன்ற பிசுபிசுப்பான திரவம் அளவுக்கு மீறி சுரப்பதுதான் இதற்கு முக்கியக் காரணம். 'ஆன்ட்ரோஜன்' என்ற இயக்குநீர்களின் அளவுக்கு மீறிய செயல்பாடு இதற்குரிய அடிப்படைக் காரணம். முகத்தை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்துக் கொள்வதுதான் இதனைத் தடுக்க ஒரே வழி. சிறிதளவு சூடுள்ள வெந்நீரில் முகத்தைக் கழுவிய பிறகு, மெல்லிய துணியால் மிக மிருதுவாக முகத்தைத் துடைத்துக் கொள்ள வேண்டும். சாக்லேட், கேக், ஐஸ்கிரீம், இறைச்சி, தயிர், பால்கோவா, முட்டையில் மஞ்சள் கரு போன்ற கொழுப்பு நிறைந்த உணவுகளைச் சாப்பிடக் கூடாது. கீரை, பூசணிக்காய் போன்ற நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகமாக உண்ண வேண்டும். மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முகத்தில் பவுடர், அழகு சாதனக் களிம்பு ஆகியவற்றைப் பூசக் கூடாது.



● ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

? முடி உதிர்வதைத் தடுக்க வழியுள்ளதா, டாக்டர்?

! தலைமுடி உதிர்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. காளான் கிருமிகள், புரதம், இரும்பு மற்றும் துத்தநாகம் போன்ற சத்துக்களின் குறைபாடு, மனக்கவலை, மன அழுத்தம், டைபாய்டு மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற விஷக் காய்ச்சல்கள், இயக்குநீர்க் குறைபாடு, சில மருந்துகளின் பக்கவிளைவு, நீரிழிவு, தைராய்டு நச்சுநிலை, பால்வினை நோய் ஆகியவற்றின் தீவிரத்தன்மை... இப்படிப் பல சந்தர்ப்பங்களில் உதிரலாம். காரணமறிந்து உரிய சிகிச்சையைப் பெற்றால் தலைமுடி உதிர்வதைத் தடுக்கலாம். பொதுவாகவே தினமும் சுமார் 100 முடிகள் தலையிலிருந்து உதிர்வது இயல்புதான். இதற்கு மேல் எண்ணிக்கை அதிகரித்தால்தான் கவலைப்பட வேண்டும். பால், தயிர், முட்டை, பருப்பு, இறைச்சி, பேரீச்சம்பழம், பீட்ரூட், காலிஃபிளவர், அவரை, முந்திரிப் பருப்பு, மீன் போன்ற உணவுகளை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் முடி உதிர்வது தடுக்கப்படும். உடலுக்கும் மனதிற்கும் தேவையான அளவிற்கு ஓய்வு தர வேண்டியதும் முக்கியம். நீங்களாகவே மருந்துக் கடைகளில் மருந்து மாத்திரைகளை வாங்கிச் சாப்பிடக் கூடாது.



தொப்பை உண்டாகுமா?

● எஸ். ரவிவர்மன், விளந்தை ஆண்டிமடம்.


? தூங்கினால் தொப்பை உண்டாகுமா, டாக்டர்?

! அளவோடு தூங்கினால் தொப்பை உண்டாக வாய்ப்பில்லை. நாள் முழுவதும் தூங்குவதுதான் வேலை என்றிருந்தால் தொப்பை உண்டாகும். காரணம், நாம் சாப்பிடும் உணவு செரிமானமாகி உடலில் பயன்படுவதற்கு உடலுழைப்பு தேவை. உழைப்பு குறையும்போது உணவுச் சத்துகள் முழுவதுமாகப் பயன்படாமல், கொழுப்பாக மாறி, உடலின் தோலடித் திசுக்களில் சேர்ந்து விடும். குறிப்பாக, வயிற்றுத் தசைகளில் இந்த அதீதக் கொழுப்பு படிந்து விடும். இதுதான் தொப்பை விழுவதற்குக் காரணம்.



நர்மதையின் மகிமை!





‘‘அம்மா! இரண்டு நாட்களாய் ஏதோ சொல்ல முயற்சிக்கிறாய்! ஆனால் வார்த்தைகள் வெளிவருவதில்லை. எதுவானாலும் தயங்காமல் சொல்லு. அதை நான் எப்பாடு பட்டாவது நிறைவேற்றி வைக்கிறேன்'' என்றான் சுவாதன்.

''சுவாதா! உன் தகப்பனார் பெரும் புண்ணிய சாலி. காசிக்குப் போன இடத்தில் மரணமடைந்து விட்டார். என்னைப் பார்த்தாயா? காய்ச்சல், வயிற்று வலி என்று ஒரு வாரமாய் படுக்கையில் விழுந்து விட்டேன். காது கேட்கவில்லை. பார்வை மங்குகிறது. கைகால்கள் ஓய்ந்து விட்டன. இந்த நிலையில் கங்கையில் நீராட முடியுமா? என் அஸ்தியை கங்கையில் சேர்ப்பாயா?'' என்று தாபத்தோடு கேட்டாள்.

''அம்மா! அப்பா மரணமடையும் போது எனக்கு ஏழு வயது. தம்பிக்கு மூன்று வயது. நீ எங்கள் இருவரையும் ஆளாக்க எ

தனை கஷ்டப்பட்டாய்! கடமையை உயிராய் நினைத்துப் பாடுபட்ட உனக்கு எத்தனை புண்ணியம் சேர்ந்திருக்கும்! வருந்தாதே! நிச்சயம் உன் விருப்பத்தை நான் பூர்த்தி செய்வேன்'' என்று வாக்களித்தான் சுவாதன்.


அன்றிரவே உயிர் நீத்தாள் அவன் தாய். தாயின் ஈமச் சடங்குகள் முடிந்ததும் தம்பியிடம் வீட்டுப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு ஒரு நம்பிக்கையான பணியாளனுடன் காசிக்குப் புறப்பட்டான் சுவாதன்.

ஒவ்வொரு நாள் இரவும் ஏதாவதொரு கிராமத்தில் அகலமான திண்ணை உள்ள வீட்டில் தங்குவார்கள். ஒரு விடியற் காலைப் பொழுதில் வீட்டுக்குரியவர் தம் மனைவியிடம் "அடியே! பால் செம்பைக் கொண்டு வா" என்று கூறியபடி கன்றுக் குட்டியை அவிழ்த்து விட்டார்.

தாயிடம் பால் குடிக்கும் அவசரம். துள்ளிக் குதித்து திமிறி ஓடிய கன்று வீட்டு எஜமானர் காலை மிதித்து விட்டது. அவர் பாதத்தில் ஒரு கிரந்திப் புண். வலி தாங்க முடியாமல் தவித்தார். பிறகு கூரையில் செருகி இருந்த கழியை எடுத்து கன்றை விளாசித் தள்ளினார்.

சுவாதனும் பணியாளும் கன்றுக்குப் பரிந்து பேசினால் 'எழுந்து போ' என்று சொல்லி விடுவாரோ என அஞ்சி செய்வதறியாது வருந்தினர்.

அன்று கன்றுக்



ஆர். பொன்னம்மாள்

குப் பாலே விடாமல் பாலைக் கறந்ததும் கட்டிப் போட்டுவிட்டுப் போய் விட்டார். "ஒரு வேளை பட்டினி போட்டால்தான் புத்தி வரும்" என்று உறுமிக் கொண்டே போனார்.

சுவாதனுக்கு மிருக பாஷை தெரியும். கன்று, "அம்மா! நீ ஏன் அழுகிறாய்! எல்லாம் பூர்வ ஜென்ம வினை. பொறுமையைக் கடைப்பிடித்திருந்தால் இந்தத் துன்பம் நேர்ந்திருக்காதல்லவா?" என்றது.

"அதற்காக ஒரு தப்புக்கு இரண்டு தண்டனை கொடுப்பதா? நான் படும் துக்கத்தை அவனும்பட வேண்டும். இவனது அருமைப் பிள்ளை சாயங்காலம் பால் கறக்க வரும் போது என் கொம்புகளால் முட்டிக் கொன்று விடுகிறேன் பார்" என்றது மாடு.

சுவாதன் திகைத்தான்.

"அம்மா! அது ரொம்பத் தப்பு! எஜமானரது கால் புண்ணில் நான் மிதித்தேன். அவர் என்னை அடித்தார். நான் பசியால் தவிக்கிறேன். இதற்கு அந்தப் பையன் என்ன செய்வான்? சோழ மண்டலத்து ராஜா கன்றுக்குட்டி மேல் தன் மகன் தேரேற்றிக் கொன்றதற்காக, தன் பிள்ளை மேல் ரதத்தை ஓட்டி இருக்கிறார். அவரது நீதியைக் கண்டு வரலாறு புகழ்கிறது. உன் செயல் கேட்டால் ஊர் உன்னை இகழும். திண்ணையிலிருக்கும் மனிதன் இதைக் கேட்கிறதைப் பார். அவன் போய் எஜமானரிடம் உன் எண்ணத்தைச் சொன்னால் நீயும் நானும் மடிவோம்" என்றது கன்று.

"இதைப் பற்றி யார் எச்சரிக்க வாய் திறந்தாலும் அவர்களின் திறந்த வாய் மறுபடி மூடாது" என்று சினத்தோடு கூறியது பசு.

"அம்மா! பாவம் செய்துதான் மாடாகப் பிறந்து உழைக்கிறோம். மறுபடி பிரம்மஹத்தி செய்யலாமா?" என்று நயமாகக் கேட்டது கன்று.

"கொலை செய்தால் பாவம் வரும். நான் பழிதானே தீர்த்துக் கொள்ளப் போகிறேன்" என்றது மாடு.

அதே சமயம் வீட்டு எசமானர் வெளியே வந்து, "ஐயா! அதிகாலை எழுந்து நீராடுவது நல்லது. போஜனம் தயாராகிக் கொண்டிருக்கிறது. சாப்பிட்டு விட்டுப் போகலாம்" என்றார்.

உண்மையைச் சொல்ல முடியாத இக்கட்டில் சாப்பிட மனம் ஒப்பாத சுவாதன், "ஐயா! இன்று எனக்கு விரதம். தவிர வெகு களைப்பாக இருக்கிறது. நடக்க முடியாது போலிருப்பதால் நாளை செல்கிறேன். நீராடி விட்டு பழம் வைத்திருக்கிறேன். அதைச் சாப்பிடுகிறேன்" என்றான்.

மாலையாயிற்று. எசமானரின் பிள்ளை வெளியூர் போயிருப்பதாகச் சொன்னார்கள். பசிக் களைப்பில் கண் அயர்ந்த சுவாதன் "அம்மா" என்ற அலறல் சத்தம் கேட்டு கண் விழித்தான்.

மாடு தான் சொன்னபடி செய்து விட்டது! அக்கம் பக்கத்தினர், அதிகாலை வயலுக்குச் செல்பவர், பெற்றோர் என சிறு கூட்டம் கூடி இருந்தது.

இரத்த வெள்ளத்தில் கிடந்த பையனை வீட்டிற்குள் தூக்கிச் சென்றனர். அதற்குள் யாரோ செய்தி சொல்ல வைத்தியர் மருந்துப் பெட்டியுடன் வந்தார்.

"இப்பத்தான் ஊரிலேயிருந்து வந்தான். அப்பா காலை கன்றுக்குட்டி மிதிச்சதிலே நொண்டறாரு. நடக்க முடியலே! அவர் எழுந்திருக்கிறதுக்குள்ளே பாலைக் கறந்துடுன்னேனே, பாவி" என்று புலம்பினாள் தாய்!

"எமகாதகமாடு... இனிமே கொட்டி

"அவருக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் நிறைய இருக்கு."

"என்ன செய்கிறார்?"

"டீ மாஸ்டர்!"

- எஸ். மோகன்



விலே அதைப் பார்க்கக் கூடாது" என்று எசமானர் கத்த, உறவினர் ஒருவர் அதை அவிழ்த்து விட்டார். "பழகின மாடு... ரெண்டு நாள் சுத்திட்டு தானே வரும்" என்று சமாதானமும் சொல்லிக் கொண்டார்.

அதே சமயம் வைத்தியர் "கவலைப்பட வேண்டாம். இரத்தப் போக்கு நின்னுடுச்சு. கொம்பு விலாவிலேதான் பட்டிருக்கு. உயிருக்கு அபாயமில்லை" என்று சொன்னதைக் கேட்ட சுவாதன் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி தன் போக்கில் ஓடிக் கொண்டிருந்த பசுவைப் பணியாளுடன் பின் தொடர்ந்தான்.

வெள்ளைப் பசுவின் உடலில் சாம்பல் பூத்தாற் போன்ற கறுப்பு ஒட்டிக் கொண்டிருந்தது. மாடு ஓடியதற்கு தூசியாயிருந்தால் அது பறந்திருக்குமே! அது பழி வாங்க நினைத்த பாவம் என்று நினைத்த சுவாதன் மாடு என்ன செய்யப் போகிறதென்ற ஆவலில் பின் தொடர்ந்தான்.


நர்மதா நதியில் இறங்கி நீராடியது பசு. பின்னர் கரையிலிருந்த நந்திகேஸ்வரரை வணங்கியது. 'இது போன்ற பாப எண்ணங்கள் இனிமேல் தோன்றக் கூடாதென்று' வேண்டிக் கொண்டது. அப்போதுதான் சுவாதன் கவனித்தான். பசுவின் மேல் ஒட்டியிருந்த கருமை நிறம் நீங்கி மீண்டும் வெள்ளைப் பசுவாகி இருந்தது.

"அட! இந்த இடத்திற்கு இத்தனை மகிமையா?" என்று வியந்தார்கள் சுவாதனும் அவனது பணியாளும்.

அப்போது அதிக லாவண்யமான ஒரு மங்கை வந்தாள்.

"அம்மா! தாங்கள் இந்த ஊர்காரரா? ஒரு அந்தணச் சிறுவனைக் குத்திவிட்டு வந்த பசு கறுப்பாகி விட்டது. இந்த நதியில் நீராடியதும் பழைய வெண்மை வந்து விட்டது. இந்த க்ஷேத்திரத்தின் புனிதத்தைத் தாங்கள் அறிவீர்களா?" என்று நயமாகக் கேட்டான் சுவாதன்.

"ருஷிகை என்ற பெண் தினமும் இந்நதியில் நீராடி சிவபெருமானையும் நந்தியையும் வழிபடுவாள். மூடாசுரன் சிவ பூஜை செய்ய விடாமல் அவளுக்கு இடைஞ்சல் கொடுத்தான். பூக்களை வாரி



"உங்கள் வீட்டில் ருசிகர திருட்டு நடந்திருக்காமே!"

"ஆமாம், சமைத்து வைத்திருந்த பலகாரங்களைக் காணோம்."

— எஸ். மோகன்

இறைப்பான். அபிஷேகப் பொருட்களைக் கொட்டுவான்.

"ஓ என்று கத்திக் கூச்சலிடுவான். பயங்கர வடிவெடுத்து அவளைப் பயமுறுத்துவான்.

"ஒருநாள் அவள் சிவலிங்கத்தைக் கட்டிக் கொண்டு தன்னைக் காப்பாற்றும்படி அழுதாள். சிவபெருமான் அருளால் கூரிய கொம்புடைய காளை ஒன்று பயங்கர வடிவுடன் உறுமிக் கொண்டு வந்தது. மூடாசுரன் குதிகால் பிடரியில் பட ஓடினான். அதன் பிறகு நிம்மதியாய் பூஜை செய்தாள் ருஷிகை. என் பெயர் கங்கை. இன்று வைசாக சுத்தசப்தமி. ஆண்டுதோறும் இந்த நாளில் என் தோழி நர்மதையோடு கூடிக்களிக்க வருவேன். உன் தாயின் அஸ்தியை இங்கேயே கரைக்கலாம். இன்று இங்கே குளிப்பவர்களுக்கு கங்கையில் நீராடிய புண்ணியமும் கிடைக்கும். இது பக்தை ருஷிகையின் பிரார்த்தனை" என்று கூறியவளை அடுத்த வினாடி காணவில்லை!

சுவாதன், பசு நீராடிய இடத்தில் குளித்து தாயின் அஸ்தியைக் கரைத்தான். கங்கையையும் நினைத்துக் கொண்டான்.

"மைந்தா! நான் ஸ்வர்க்க லோகம் செல்கிறேன். தாயின் ஆசையை நிறைவேற்றிய நீ எல்லா நலன்களும் பெற்று சந்தோஷமாக வாழ்வாய்" என்ற தாயின் குரல் அசரீரியாக ஒலிக்க மனம் மகிழ்ந்தான் சுவாதன்.

சிவபெருமானையும் நந்திகேஸ்வரரையும் வணங்கி ஊர் வந்து சேர்ந்தான்.

என்ன கிடைக்கும்?

கதை: ஜானகி குமார்   படம்: சசி




"அமைச்சரே உங்களைத்தான் கேட்கிறேன். என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தால் என்ன பொருள்?" என்றார் அரசர். அமைச்சர் பேசாமல் இருந்தார்.
"நான் கேட்பது காதில் விழவில்லையா?" என்று கோபப்பட்டார் அரசர்.
அப்போதும் அமைச்சர் தலைகவிழ்ந்தபடி நின்றார். "என்னை அவமானப்படுத்துகிறீர்களா?" என்று எரிந்து விழுந்தார் அரசர்.
அமைச்சரிடம் எந்த மாற்றமும் இல்லை. "இத்தனை முறை கேட்டும் அலட்சியப்படுத்திய உம் தலையைச் சீவ உத்தரவிடுகிறேன்" என்றார் அரசர்.
உடனே அமைச்சர், "நான் சொன்னபடி முட்டாளுடன் காலந்தள்ளி, மௌனமாக இருந்தாலும் தண்டனைதான்" என்றார்.
அரசர் தவறை உணர்ந்து அமைச்சரிடம் மன்னிப்புக் கேட்டார்.

இப்பொழுதே அட்மிஷன் கொடுக்கலாம்!

என்ன நோய்?

அறிவியல் பாட வேளை. ஆசிரியர் முதல் நாள் நடத்திய பாடத்திலிருந்து கேள்வி கேட்க ஆரம்பித்தார். ஒரு மாணவியை எழுப்பி "தக்காளியைத் தாக்கும் நோய் என்ன என்றார்?" அவள் சரியான பதிலைக் கூறி அமர்ந்தாள். பிறகு ஒரு மாணவனை எழுப்பி "எலுமிச்சைக்கு வரும் நோய் என்ன?" என்றார். கேள்விக்குப் பதில் தெரிந்த சந்தோஷத்தில் எழுந்தவன் "கேன்சர் நோய்" என்றான். அனைவரும் சிரித்தோம். திருதிருவென விழித்த அந்த மாணவன் சிறிது நேரத்தில் உணர்ந்து கொண்டு அசடுவழிய "கேன்கர் சார்" என்றான்.

– சு. கெஜா, பதினோராம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
கருங்குழி.




எங்கள்

புரிகிற மாதிரி...

கணித வகுப்பு. ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது அவரை தலைமை ஆசிரியர் அழைத்தார். உடனே கணிதத்தில் முதல் மதிப்பெண் வாங்கும் மாணவனிடம் கணக்கைப் போட்டுக்காட்டுமாறு கூறிச் சென்றார் ஆசிரியர். அவன் கணக்குகளைப் போட்டு விளக்கமளித்தான். இறுதியில் "நம்ம ஆசிரியரைப் போல் தெளிவா மத்தவங்களுக்குப் புரிகிற மாதிரி சொல்லணும். அப்படி சொல்லத் தெரியாதவன் எல்லாம் முட்டாள்னு சொல்வேன். இப்ப நான் புரியற மாதிரி சொல்லிக் கொடுத்தேனா?" என்றான். உடனே என் குறும்புக்கார நண்பன் "நீ என்ன சொன்னேன்னு இன்னொரு தடவை புரிகிற மாதிரி சொல்லுடா!" என்றானே பார்க்கலாம்!

– ர. சின்னத்தம்பி,
வெள்ளையாம்பட்டு.




பள்ளியில் நடந்தது!

ஐ என்றால்...



தமிழ் பாடவேளை. ஆசிரியர் இலக்கணத்தில் ஐ வகைப் பொருட்களைக் குறிக்கும் சொற்களைப் பற்றி நடத்திக் கொண்டிருந்தார். "ஐம்பெருங்காப்பியங்கள் என்றால் ஐந்து பெரிய காப்பியங்கள், ஐவகை நிலங்கள் என்றால் ஐந்து வகை நிலங்கள், ஐநூறு என்றால் ஐந்து நூறுகள்" என்று கூறி நிறுத்தினார். உடனே சக மாணவன் ஒருவன் எழுந்து "ஐ என்றால் ஐந்துதானே சார்" என்றான். ஆசிரியரும் ஆமாம் என்றார். "ஐப்பசி என்றால் ஐந்து வகைப் பசிதானே!" என்று கேட்டான். ஆசிரியர் சிறிது திகைத்துப் பின் சிரித்தார்.

– ஏ.எல். பாத்திமா, காரைக்கால்.



அட்வான்ஸ்

ஆசிரியர் ஒரு நாள் எங்களைப் பார்த்து "வருங்காலத்தில் என்னவாக வர ஆசைப்படுகிறீர்கள்?" என்றார். ஒவ்வொருவரும் தங்கள் ஆசையைத் தெரிவித்தனர். சுமாராகப் படிக்கும் என் நண்பன் எழுந்து "நான் டாக்டராவேன் சார்" என்றான். ஆசிரியர், "நீ டாக்டராயிடுவியா!" என்றபடி அவனை ஏளனமாகப் பார்த்து சிரித்தார். அதைப் பார்த்த நண்பன், "சார், நீங்க இப்பவே என்னை நம்பி அட்வான்ஸ் ஃபீஸே தரலாம்" என்றான். எல்லோரும் கைதட்டி சிரித்தோம். "அந்த நம்பிக்கை இருந்தால் இப்போதே நல்லா படிக்க முயற்சி செய்" என்று கூறி அவனை உட்கார வைத்தார் ஆசிரியர்.

– ராமகிருஷ்ணன், காயக்காடு, புதுக்கோட்டை.

அப்பா பெயர்?

பக்கத்து கிராமத்திலிருந்து ஒரு மாணவி எங்கள் வகுப்பிற்குப் புதிதாக வந்து சேர்ந்தாள். பாடவேளை மாறும்போது ஒவ்வொரு ஆசிரியரும் அவள் பெயரையும் அவள் அப்பாவின் பெயரையும் கேட்டனர். அவள் தன் பெயரை மட்டும் எல்லோருக்கும் கேட்கும் விதமாகச் சொன்னாள். ஆனால் அவள் அப்பாவின் பெயரை மட்டும் ஆசிரியர்கள் அருகில் சென்று ரகசியமாகக் கூறினாள். எங்கள் எல்லோருக்கும் ஏன் இப்படி செய்கிறாள் என்று புரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ளும் ஆவல் எனக்கு இருந்தது. முதல் மாதத் தேர்வு ரேங்க் கார்டுகளை சேகரித்து ஆசிரியர்கள் அறையில் வைக்கச் சொன்னார் வகுப்பு ஆசிரியர் என்னிடம். நான் அவளின் ரேங்க் கார்டைப் பார்த்தேன். பெற்றோர் கையொப்பம் இடும் இடத்தில் பாவாடை என்றிருந்தது. மாணவிகள் கிண்டல் செய்வார்கள் என நினைத்து அவள் மறைத்ததைப் புரிந்து கொண்டேன்.

– என். ரம்யா,
எட்டாம் வகுப்பு, ராஜ்
மெட்ரிகுலேஷன் பள்ளி, கூறைநாடு,
மயிலாடுதுறை.



பழமொழி அம்மா!

அறையில் கமலாவும் கண்ணனும் படித்துக்கொண்டு இருந்தார்கள். இடையிடையே முதல் நாள் பள்ளியில் ஆசிரியர் கூறிய நகைச்சுவைக் கதையைப் பற்றிப் பேசிக் கொண்டே சிரித்தார்கள்.

சமையல் அறையில் இருந்தபடியே "என்னடா சிரிப்பும் விளையாட்டும், ரெண்டு பேரும் படிக்கக் கூடாதா? உங்களைப் படிக்க வைக்க அப்பா எவ்வளவு பாடு படறார்? நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்" என்றார் அம்மா.

"கமலா, பக்கத்து வீட்டு பாலு ஏதோ பழமொழி போட்டியில் கலந்து கொள்ளப் போகிறானாம். நம் அம்மா சொல்லும் பழமொழிகளை எல்லாம் அவன் சுவரில் காதை வைத்துக் கேட்டு கேட்டு இதுவரை இருபதுக்கும் மேலே எழுதி வச்சிருக்கான்" – கண்ணன்

"அப்படியா! ஏன் கண்ணா நாமும் அந்தப் போட்டியில் கலந்து கொண்டால் என்ன?" என்றாள் ஆவலுடன் கமலா.

"ரொம்ப சரி. இனி நாமும் அம்மா சொல்லும் பழமொழிகளை எழுத ஆரம்பிக்கலாம். ஆனால் அம்மா எல்லாவற்றையும் சத்தமாகச் சொல்லிடறாங்களே! அம்மாவை மெதுவாகப் பேசச் சொல்லு."

"நீயே சொல்லு கண்ணா."

"சரி! அம்மா, அம்மா இனிமேல் நீங்க சத்தம் போட்டுப் பேச வேண்டாம்!" என்று கத்தினான் கண்ணன்.

"என்னடா சின்ன வயதிலேயே அதிகாரம் பண்ணறே. வளர்த்த கடா மார்பிலே பாய்ந்ததாம்" என்றார் அம்மா கோபத்துடன்.

"டேய் கண்ணா, கவனமாகப் பேசு. இப்போதுகூட ஒரு பழமொழி அங்கு போயிருக்கும். ஏம்மா மெள்ளப் பேசினால் என்னவாம்?"

"நீயும் அவன் சொன்னதையே சொல்றியா? சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை!"

"கண்ணா அப்பா வந்துட்டாங்க. அப்பாவிடம் சொல்லி அம்மாவை மெள்ளப் பேச வைக்கலாம்."

கண்ணன் அப்பாவிடம் பழமொழிப் போட்டி பற்றிய எல்லா விவரங்களையும் ரகசியமாகக் கூறினான்.

"பார்வதி நீ இனிமேல் பிள்ளைகள் சொல்வதைப் போல மெதுவாகப் பேசிப் பழகு" என்றார் அப்பா.

"நீங்களும் அவர்களுடன் சேர்ந்து விட்டீர்களா? உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி."

"பக்கத்து வீட்டுப் பரிமளா வந்திருக்காள். ஒரு கரண்டி காப்பித் தூள் வேணுமாம்" என்றான் கண்ணன்.

அம்மா கரண்டியை வாங்கி காப்பித் தூளை நிரப்பிக் கொடுத்தார். அவள் சென்றவுடன் "இவள் வேறு, தினமும் எதையாவது கேட்டுக் கொண்டு வந்து விடுகிறாள். பிச்சை எடுக்குமாம் பெருமாள்; அதை பிடுங்குமாம் அனுமார். சரி டிபன் சாப்பிட வாங்க."

மூவரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். அப்பாவும் கண்ணனும் சாப்பிட்டு முடித்து எழுந்து தங்கள் அறைக்குச் சென்றனர்.

"என்ன கமலா நீ இன்னும் சாப்பிட்டு முடிக்கலையா? உனக்குத்தான் ஊசித் தொண்டை தாழி வயிறு ஆயிற்றே" என்றார் அம்மா.

"அப்பா இந்த அம்மாவைப் பாருங்க" என்றாள் கமலா.

"பார்வதி நீ மெதுவா பேச மாட்டியா?" உள்ளிருந்து குரல் கொடுத்தார் அப்பா.

"அவளைச் சீக்கிரம் சாப்பிடுன்னு சொல்ல மாட்டீங்க. என்னைத்தான் உங்



களுக்கு அடக்கத் தெரியும். தென்னை மரத்திலே தேள் கொட்டினால் பனை மரத்திலே நெறி கட்டுமாம்!''

"சரி, சரி. எல்லோரும் ஹாலுக்கு வாங்க. பேசலாம்'' என்று குரல் கொடுத்தார் அப்பா!

"நீங்க எல்லோரும் போங்கள். எனக்கு இன்னும் நிறைய வேலை கிடக்கிறது. நாய் படுகிறபாடு தடிக் கம்புக்கு என்ன தெரியும்?''

"அம்மா நீங்க பேசறது எல்லாம் பக்கத்து வீட்டுக்கு நல்லா கேட்கும்?''

"அதனால் என்னடா? மடியிலே கனம் இருந்தால்தானே வழியிலே பயம்.''

"அம்மா நாங்கள் எதுக்காக சொல்லுகிறோம் தெரியுமா?''

"எனக்கே புத்தி சொல்ல வர்றியா? ஒன்பது பிள்ளை பெற்றவளுக்கு ஒரு பிள்ளை பெற்றவள் மருத்துவச்சியா?''

அம்மா சமையலறையில் இருந்தார்.

"அம்மா, தாயே பசிக்கிறது'' பிச்சைக்காரனின் குரல் கேட்டது.

"சாப்பாடு எல்லாம் தீர்ந்தது. அப்புறம் வா'' என்றான் கண்ணன்.

"நீ ஏண்டா அவனைப் போகச் சொல்றே? ஆத்திச்சூடி வேறு படித்திருக்கிறாய். படிக்கிறது இராமாயணம். இடிக்கிறது பெருமாள் கோயில். இரு இரு பழைய சாதம் கொண்டு வரேன்''

"வேண்டாம்மா. அது என் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது தாயே'' என்றான் பிச்சைக்காரன்.

"அப்படியா? தானம் கிடைக்கிற மாட்டைப் பல்லைப் பிடுங்கிப் பார்த்தானாம்'' என்றார் அம்மா.

"சில்லறை கொடுங்கள். இன்று புதுப் படம் வந்துள்ளது. பார்த்தாகணும்'' என்றான் பிச்சைக்காரன்.

"ஓகோ! பரவாயில்லையே. கும்பி கூழுக்கு அழுகிறது. குடுமி பூவுக்கு அழுகிறது. போயிட்டு வா'' என்றபடி அம்மா உள்ளே சென்றார்.

பக்கத்து வீட்டு பாலு வந்தான்.

"டேய் கண்ணா. உங்க அம்மா மாதிரி எங்க அம்மாவுக்குப் பழமொழியோடு பேசவே தெரியலை''என்றான்.

கே. மீனாட்சி

அதைக் கேட்ட அம்மா, ''எதுவும் தானாக வரணும் பாலு. தானாய் பழுத்தால் பழம். தட்டிப் பழுத்தால் பழமாகுமா?''

''அம்மா நீங்க கொஞ்சம் சும்மா இருங்க'' என்றான் எரிச்சலுடன் கண்ணன்.

''எங்க வீட்டுக்கு வாங்க ஆன்ட்டி. எங்க அம்மாவுடன் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருங்க'' பாலு ஆர்வத்துடன் கூப்பிட்டான்.

''வரேன் பாலு. இவர்களுக்கு நான் பேசினாலே பிடிக்கிறதில்லை. கழுதைக்குத் தெரியுமோ கற்பூர வாசனை?'' என்றபடி பாலுவுடன் கிளம்பினார் அம்மா.

''ஐயையோ! டே கண்ணா! அம்மா அங்கு போய் எல்லா பழமொழிகளையும் சொல்லிடுவாங்க''- கத்தினாள் கமலா.

''போகட்டும் விடு. நாம் சொன்னால் கேட்கவா போறாங்க?'' என்றான் கண்ணன்.

சிறிது நேரத்தில் அம்மா திரும்பினார்.

''அம்மா எல்லா பழமொழிகளையும் அங்கேயே சொல்லி முடிச்சிட்டீங்களா?''

''அதனால் என்னடா? ஆறெல்லாம் பாலாய் ஓடுகிறது. அண்ணே குடி, தம்பி குடி. அவ்வளவுதான்.''

நாட்கள் சென்றன. ஒருநாள் ''ஆன்ட்டிக்கிட்டே இந்தப் பரிசைக் காட்டணும்'' மகிழ்ச்சியோடு பாலு கூறினான். கண்ணனுக்குக் கோபமாக வந்தது.

''ஆன்ட்டி உங்களால்தான் எனக்கு இந்தப் பரிசு கிடைத்தது.''

''என்னாலா? நன்றாக இருக்கிறது. பாலு நீ கெட்டிக்காரன்'' என்று பாராட்டினார் அம்மா.

பாலு சென்றவுடன் ''நீங்கதானே அம்மா எல்லா பழமொழிகளையும் சத்தமாகச் சொல்லிச் சொல்லி அவனுக்குப் பரிசு கிடைக்கும்படி செஞ்சிட்டீங்க'' அழும் குரலில் சொன்னாள் கமலா.


''அடடா அப்படியா! பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்த கதையாகி விட்டதே! காரணத்தை முதலிலேயே சொல்லியிருக்கலாமே! சரி விடு'' என்றார் அம்மா வருத்தத்துடன்.


''எங்களுக்குப் பரிசு கிடைக்காவிட்டால் பரவாயில்லை. உங்களால் தான் பாலுவுக்குப் பரிசு கிடைச்சிருக்கு. எல்லோரும் உங்களைப் பாராட்டறாங்க. எங்களுக்குப் பரிசு கிடைக்காவிட்டாலும் 'பழமொழி அம்மா' நீங்க இருக்கீங்களே அதுவே போதும்'' என்றான் கண்ணன்.

கமலாவும் அதை ஆமோதித்தாள்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை!







சார் தபால்!

வல்லவன் கைப் பம்பரம் மணலிலும் ஆடும்!

✉ "தங்கச்சிலை கதை என்னை மிகவும் நேசிக்க வைத்துவிட்டது. கானகங்களின் ஊடே டிங்கு, சத்யா, நித்யாவின் பயணம் த்ரிலிங்காக இருந்தது. அழகான கதையைத் தந்த வாண்டு மாமாவிற்கு நன்றி" என்கிறார் முகிலன்குடியிலிருந்து **பா. ரஞ்சிதா.**

✉ தூத்துக்குடியிலிருந்து **எஸ். துக்கா காத்யாயனி** "வல்லவன் கைப் பம்பரம் மணலிலும் ஆடும்' என்பதைப் போல எந்தத் தொழிலில் இருந்தாலும் திறமையானவர்கள் சம்பாதித்து விடுவார்கள் என்பதைத் தெளிவாக்கியது மாலதியின் கதை. எங்களுக்குப் பிடித்தமான ஐஸ்கிரீம் கட்டுரையைக் கடைசி பக்கத்திற்குத் தள்ளிவிட்டதைக் கண்டிக்கிறேன்" என்கிறார்.

✉ "தங்கச்சிலை தொடர்கதை ஆரம்பம் முதல் முடிவு வரை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. அனாவசியமாக வளர்க்காமல், அதேசமயம் எந்தவிதக் குறைபாடும் இன்றி எழுதிய வாண்டுமாமாவிற்கு எங்கள் நன்றி" என்கிறார் திருவண்ணாமலையிலிருந்து **டி.கே. சீனிவாசன்.**

✉ சாத்தூரிலிருந்து **எம். செல்லையா** "இருபத்தைந்து பைசாவுக்கு ஒரு ஐஸ் கடனாக வாங்கி, அதைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் அதற்கு வட்டியோடு ஒரு ரூபாய் கொடுத்த எஸ்.வி. சேகரை நினைத்து சிரிப்பாக வருகிறது. நகைச்சுவை நடிகரின் குழந்தைப் பருவ அனுபவங்களும் நகைச்சுவையாகவே இருந்தன" என்கிறார்.

✉ "உதவிக்கு ஓடிவா பரிசுக்கதை மிகவும் அருமை. பாலு மற்றும் கோபுவின் புத்தி சாதுர்யம் மெச்சும்படி இருந்தது. அழகான படங்களுடன் வெளியான வண்ண லேபில்கள் எல்லோருக்குமே பிடிக்கும்" என்கிறார் அய்யம்பாளையத்திலிருந்து **எஸ். எத்திராஜன்.**

✉ பரமக்குடியிலிருந்து **கே. தீபா** "குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் தாய்கள் கட்டுரை விலங்கு, பறவைகள், நீர்வாழ் பிராணிகள் எப்படி தங்கள் குழந்தைகளை இனம் கண்டு கொள்கின்றன என்பதை விளக்கியிருந்தது. படித்தபோது எனக்கு ஆச்சர்யமாகவும் பிரமிப்பாகவும் இருந்தது" என்கிறார்.


✉ "கோகுலத்தில் வரும் வண்ணப் பக்கங்கள் நன்றாக உள்ளன. முள்ளம் பன்றியை வண்ணத்தில் போடாதது ஏன்? புதிய தொடர்கதையைப் படிக்க ஜூன் இதழை ஆவலோடு எதிர்நோக்கியிருக்கிறேன்" என்கிறார் அறந்தாங்கியிலிருந்து **மா. அசோக்.**

கோகுலம் சுழல் கோப்பை




கோகுலம் சுழல் கோப்பையைப் பற்றி எல்லோருக்கும் தெரியும் தானே! கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை வத்தலகுண்டு, ஆண்டிபட்டி பள்ளிகள் பெற்றுள்ளன. உங்கள் பள்ளியும் கோப்பையைப் பெற வேண்டுமானால் உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். இன்னும் ஆறு மாதங்களே உள்ளன!


கோடை விடுமுறைப் போட்டி – 2





பழமொழியைக் கண்டுபிடியுங்கள்!


இங்கு இரண்டு தொகுதிகளாகப் படங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் உள்ள படங்களின் முதல் எழுத்தையும் இரண்டாவது தொகுதியில் உள்ள படங்களின் இரண்டாவது எழுத்தையும் எடுத்து எழுதி வரிசைப்படுத்துங்கள். உங்களுக்கு நன்கு அறிமுகமான ஒரு பழமொழி கிடைக்கும். பழமொழியைக் கண்டுபிடித்து எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி **30.6.2000.**





















அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால் ரூ. 200 பரிசு குலுக்கல் முறையிலே பத்து பேருக்குப் பகிர்ந்து அளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.





ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை-97.



பாலைவனக் கப்பல்

பாலைவனக் கப்பல் - இந்தப் பெயரைச் சொன்னவுடன் நீங்கள் ஒட்டகம் என்று சொல்லி விடுவீர்கள். மிகச் சூடும் தணலும் உள்ள பாலைவனப் பிரதேசங்களில் கப்பல் போல் உதவுவதால் இதற்கு இந்தப் பெயர் வந்துள்ளது எனலாம். இந்த ஒட்டகத்தின் செயல்களும் நடத்தைகளும் உடல் அமைப்புகளும் மற்ற மிருகங்களிடமிருந்து வித்தியாசப்படுகின்றன.

மணற்காற்றும் தூசும் சேர்ந்து வீசும் போது நாம் நம்மையறியாமலேயே நம் கண்களை மூடிக் கொள்கின்றோம். பாலைவனங்களில் மணற்காற்று சில நேரங்களில் சுழன்று சுழன்று வீசும். அப்போது பயணம் செய்பவர்கள் கண்களை மூடிக் கொள்வர். ஒட்டகமோ கண்களைத் தவிர்த்து தனது மூக்கினை மூடிக் கொள்கின்றது.

பாலைவனப் பிரதேசங்களில் அதிக சூட்டினைத் தாங்குவதற்கேற்ப ஒட்டகங்களின் தோல் பகுதி மற்ற மிருகங்களை விட மிகவும் தடிமனாக உள்ளது.

தினம் 40 கி.மீ. தூரம் நடக்க இவற்றால் இயலும். பாலைவனங்களில் மணல்வெளியில் நடக்கும் போது இவற்றின் கால்கள் மணலில் புதைந்து போகாதவண்ணம் உதவுவது பரந்த காலடிகளாகும்.

ஒட்டகங்களுக்கு மற்ற மிருகங்களை விட கண்கூழைகள் (பீழைகள்) அதிகமாகச் சுரக்கும். மணற்காற்றிலிருந்தும் தூசுகளிலிருந்தும் காக்கும் தடுப்பு போல இந்தக் கூழைகள் உதவுகின்றன.

ஒரு துளி நீர் கூட அருந்தாமல் ஒட்டகங்கள் எவ்வளவு தூரம் வேண்டுமென்றாலும் நடக்கும் தன்மை கொண்டவை.

மேலும் நீர் எங்குள்ளது என்று அறியும் தன்மையும் இவை பெற்றுள்ளன. நீரைக் கண்டால் 10 நிமிடத்தில் சுமார் 125 லிட்டர் வரை உறிஞ்சும் தன்மை கொண்டது.

கள்ளிச் செடி மற்றும் ஈச்சைப் பழங்கள் இவற்றின் உணவாகும்.

ஒட்டகங்கள் பாரம் சுமக்கவும் பயணம் செல்லவும் மட்டுமல்ல, அவற்றின் பாலும் மனிதர்களுக்கு உதவுகின்றது. மேலும் அவற்றின் ரோமங்கள் துணி நெய்வதற்கு பயன்படுகின்றன.

பிறந்த சில நிமிடங்களிலேயே ஒட்டகக் குட்டிகளால் நடக்க இயலும். ஆனால் நான்கு வயது வரை இவை தம் தாயின் பராமரிப்பிலேயே வளருகின்றன.

ஒட்டகங்களுக்கு அழகூட்டுவது முதுகின் மீதுள்ள திமில்கள் ஆகும். அரேபியன் ஒட்டகங்கள் பாரசீக ஒட்டகங்கள் என்று ஒட்டகங்கள் இருவகைப்படும். இரண்டு திமில்கள் உள்ள ஒட்டகங்கள் பாரசீக இனத்தைச் சேர்ந்தன. ஒற்றைத் திமில் உள்ள ஒட்டகங்கள் அரேபியப் பகுதிகளிலும் வடக்கு ஆப்பிரிக்காவிலும் மற்றும் ஆஸ்திரேலியாவிலும் காணப்படுகின்றன.

— செய்யது மைதீன்,
மேலப்பாளையம்.

• மகிழ்ச்சியில் பாகிஸ்தான் அணி



மேற்கு இந்தியத்தீவுகளில் ஒரு மாத காலமாக ஜிம்பாப்வே, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே மூத்தரப்பு கிரிக்கெட் தொடர் நடந்தது. இந்தத் தொடரின் இறுதிச் சுற்றுக்கு பாகிஸ் தானும் மேற்கிந்தியத் தீவுகள் அணியும் தகுதி பெற்றன. இந்த இரு அணிகளி டையே மூன்று இறுதி ஆட்டங்கள் நடந்தன. முதல் இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானும் இரண்டாவது ஆட்டத் தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியும் வெற்றி பெற்றன.. எனவே இறுதிப் போட்டியை எல்லோரும் ஆவலுடன் எதிர் நோக்கி யிருந்தனர். முதலில் பேட் செய்த மேற் கிந்தியத் தீவுகள் அணி 33.2 ஓவரில் 114 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

மிகக் குறைந்த இலக்கான 115 ரன்களை எடுக்க பாகிஸ்தான் களத்தில் இறங்கியது. ஆனால் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிங் அடுத்தடுத்து நான்கு விக்கெட்டுகளை விழச் செய்து பாகிஸ்தானைத் திணறடித்தார். இருந்தாலும் இன்சமாம்-உல் ஹக் வழக்கம் போல் நிதானமாக ஆடி பாகிஸ்தானுக்கு வெற்றி யைத் தேடித் தந்து விட்டார். 45.1 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 116 ரன்களை எடுத்தது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் அணியின் முஷ்டாக் அகமது 22 ரன்கள் கொடுத்து நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தியதால் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். தொடர் முழுவதும் சிறப்பாக விளை யாடிய இன்சமாம்-உல்-ஹக் தொடர் நாயகன் பரிசை வென்றார்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் இங்கிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ் தானுக்குச் செல்ல இருக்கிறது. 1988ஆம் ஆண்டு மைக்கேட்டிங் தலைமையிலான இங்கிலாந்து அணி பாகிஸ்தானில் விளை யாடியது. அப்போது மைக்கேட்டிங்கிற்கும் அம்பையருக்கும் தகராறு ஏற்பட்டது. மைக் கேட்டிங் மன்னிப்புக் கேட்டால்தான் போட்டி தொடரும் என்றார் அம்பையர். மைக் கேட்டிங் மன்னிப்பு கேட்கவில்லை.

இதைத் தொடர்ந்து ஒரு நாள் ஆட்டம் கைவிடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பின் இங்கிலாந்து பாகிஸ்தான் செல்லவில்லை. சமீபத்தில் இரு நாட்டு கிரிக்கெட்டு போர்டு களும் கூடிப் பேசின. இதன் விளைவாக இந்த ஆண்டு அக்டோபர் 16ந் தேதி இங்கி லாந்து அணி பாகிஸ்தானுக்குச் செல்வது என முடிவானது.

விளையாட்டு அரங்கம்!



• ஹேமந்த் பதானி

ரஞ்சி கோப் பைக்காக அரை இறுதிப் போட் டியில் தமிழக கிரிக்கெட் அணி யும் மும்பை கிரிக் கெட் அணியும் விளையாடின. மும்பை அணியில் டெண்டுல்கர், வினோத் காம்ப்ளி போன்றவர்கள் விளையாடினர். இறுதிப் போட் டியில் மும்பை அணி வென்று கோப்பை யைக் கைப்பற்றியது. தமிழக அணி தோற்றாலும் அதில் விளையாடிய ஹேமந்த் கே.பதானி மிகவும் சிறப்பாக விளையாடி எல்லோரின் கவனத்தையும் திருப்பியிருக் கிறார். இடது கை பேட்ஸ்மேனான பதானி யின் ஆட்டம் தன்னை வெகுவாகக் கவர்ந்ததாகவும் அவருக்குச் சிறப்பான எதிர்காலம் உண்டு என்றும் டெண்டுல் கர் பாராட்டியிருக்கிறார். ராபின்சிங், சடகோபன் ரமேஷ் ஆகியோரை அடுத்து பதானி தமிழகத்துக்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்ப்பார் என்பதில் சந்தேக மில்லை.



தண்ணீர்... தண்ணீர்

தண்ணீரைப் பீய்ச்சியடித்து விளையாடுவது என்றால் எல்லோருக்கும் விருப்பம்தான்! அதுவும் இந்தக் கோடை காலத்தில் தண்ணீரைக் கண்டால் அமிர்தத்தைக் கண்டது போல் உணர்வு ஏற்படும்! வெயிலின் கடுமையிலிருந்து தப்பிக்க தண்ணீர் விளையாட்டு, அடிக்கடி குளியல் புத்துணர்ச்சியைத் தரும். கிராமப் புறங்களில் குளம், குட்டைகளில் நீர் இருந்தால், அதில் குளிப்பவர்கள் அதன் சுகத்தை முழுமையாக அனுபவிக்க முடியும்.

வெயில் காலத்தில் அதிகமாக வியர்வை வெளியேறும். நாக்கு வறட்சியடையும். எனவே சாதாரணமாக தண்ணீர் குடிக்கும் அளவை விட அதிகமாகத் தண்ணீர் பருக வேண்டும். தண்ணீர் மூலம் நோய்கள் பரவுவதால் எப்பொழுதும் காய்ச்சியே குடிக்க வேண்டும்.

உடல் வெப்பத்தைத் தணிக்க இளநீர், நுங்கு, மோர், தர்பூசணி, வெள்ளரிக்காய், பழச்சாறு என சாப்பிடலாம்.

வெயில் காலத்தில் வழக்கமாக செலவாகும் தண்ணீரின் அளவைவிட அதிகமாக செலவாகும். இந்த நேரத்தில் தான் தண்ணீர் தட்டுப்பாடும் ஏற்படுகிறது.

தண்ணீரைப் பொதுவாகவே சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். வீட்டுத் தோட்டத்திற்குப் பாத்திரம் கழுவிய நீர், துணி அலசிய நீர் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். சிக்கனத்திற்குச் சிக்கனம், செடிகளுக்கும் தண்ணீர் விட்டு விடலாம்!


குழாய்களில் சொட்டுச் சொட்டாக நீர் வடிந்தால் உடனே குழாயைச் சரி செய்ய வேண்டும். சிறு துளி தானே என்று விட்டுவிடக் கூடாது. 'சிறு துளி பெரு வெள்ளம்' என்பது போல் நாள் முழுவதும் வடிந்தால் கணிசமான தண்ணீர் வீணாகும்.

பூமியில் வெப்ப நிலை அதிகரித்து வருகிறது. சுற்றுச் சூழல் சீர்கேட்டால் வெப்பம் அதிகரித்து பனிப்பிரதேசங்களே உருகும் நிலை ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் நகரங்களில் அடுக்குமாடி கட்டடங்கள் கட்டி, ஆழ்துளை கிணறு போடுவதால் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைகிறது.

அந்தக் காலத்தில் அரசர்கள் மழை நீரை குளம், குட்டை, ஏரிகளில் சேமித்து கோடை காலத்தில் பயன்படுத்தினார்கள். இன்று அணைகள் மற்றும் சில ஏரிகளில் மட்டுமே மழை நீர் சேமிக்கப்படுகிறது. குளம், குட்டை இருந்த இடங்களில் கட்டடங்கள் முளைத்துள்ளன. இருக்கின்ற குளம், ஏரிகளைத் தூர் எடுத்து மழை நீரை அரசாங்கம் சேமிக்கலாம். நம் நாட்டில் இந்த ஆண்டு குஜராத் மற்றும் ராஜஸ்தானில் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்தில் சென்னை மற்றும் சில இடங்களில் குடிநீர் பிரச்னை உள்ளது. சென்னையின் பிரச்னையைத் தீர்க்க கிருஷ்ணா நதி நீர் படு நிதானமாக வந்து கொண்டிருக்கிறது. போதிய அளவில் வருமா; சென்னையின் குடிநீர் பிரச்னை தீருமா என்பதுதான் கேள்வி.

அட்டையில்: **ராம்குமார், ஸ்வேதா**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (*6* இதழ்கள்) ரூபாய் *36/-* ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை [illegible] 47

செய்து பாருங்கள்!



ஒவ்வொரு பொருளும் ஒரு வடிவத்தைக் கொண்டுள்ளது. நாம் அடிக்கடி பயன்படுத்தும் அஞ்சல் அட்டைகளை உபயோகித்து

எடையைத் தாங்கும் அஞ்சல் அட்டை!

சில வடிவங்களைச் செய்யலாமா?

அஞ்சல் அட்டைகள் 14 செ.மீ. X 9 செ.மீ. அளவுடையவை. உபயோகப் படுத்திய தபால் அட்டை ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த அட்டையைச் சுருட்டி ஒட்டி 9 செ.மீ. உயரமுடைய உருளையை உருவாக்குங்கள். இந்தச் சாதாரண உருளை எவ்வளவு சுமையைத் தாங்கும்? 'கால் கிலோ, அரை கிலோ' என்கிறீர்களா? அதுதான் இல்லை.


இந்த உருளை 4 கிலோ சுமையைத் தாங்கக்கூடியது.!

உருளையின் மீது புத்தகங்களை அடுக்கிப் பார்த்தால் உங்களுக்கே தெரிந்து விடும். புத்தகங்கள் விழாமல் இருக்க மையப் படுத்தி அடுக்க வேண்டும்.

இதே அட்டைகளை முக்கோணம், சதுரம், செவ்வகம் என செய்து எடையை வைத்துப் பாருங்கள். இவற்றில் எது அதிக எடையைத் தாங்குகிறது எனக் கண்டுபிடியுங்கள்.

இதே அஞ்சல் அட்டைகளை 14 செ.மீ. உயரமுள்ள உருளையாக உருவாக்குங்கள். இதில் எடையை வைத்துப் பாருங்கள். உருளைகளின் எடைதாங்கும் சக்தி அதன் உயரங்களைச் சார்ந்திருப்பது உங்களுக்கு விளங்கும்.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



"பால் கறக்காத இந்த மாட்டை யார்கிட்டே யாவது வித்துடலாம்னு பார்த்தால் நடக்க மாட்டேங்குது?"


"பாலும் கறக்காம, நடக்கவும் முடியாத இந்த மாட்டை யார் வாங்குவாங்க?"


– அ. ஹாஜா நூருல்லா

தேர்வுக்குத் தயாராகும் ராமு எதைத் தேடுகிறான்? (மேஜை மீது இருக்கும் பொருட்கள் ஒன்றோடு சம்பந்தப்பட்டது.)



வண்ணம் தீட்டுங்கள்!





பி
ரு
ந்
தா
வ்
ன
ம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka